உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

e-magazine

www.aanmeegamalar.com

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! மெயில் புக்

மலர்-5 இதழ்-151

டிசம்பர் 1-15 2022



விருப்ப சந்தா செலுத்த ஸ்கேன் செய்யவும்

www.aanmeegamalar.com e-magazine

தீபாவளியைப் போன்று கொண்டாடப்பட்ட

# தீபத்திருவிழா

## சொர்க்கத்திற்கு வழிகாட்டும் சொக்கப்பானை

e-magazine

# 50 வயதுக்குட்பட்ட பெண்களுக்கு பம்பையில் காட்சிதரும் சபரிமலை ஐயப்பன்




சபரிமலை ஐயப்பனுக்கு விபூதி, சந்தனம், பால், பன்னீர், 108 ஒரு ரூபாய் நாணயம், தேன், பஞ்சாமிர்தம், இளநீர் ஆகிய எட்டு பொருட்களைக் கொண்டு அபிஷேகம் செய்வார்கள்.

இதற்கு 'அஷ்டாபிஷேகம்' என்று பெயர்.

சபரிமலை ஐயப்பனின் உற்சவர் திருமேனி, ஆண்டுக்கு ஒரு முறை பம்பை ஆற்றுக்கு கொண்டு வரப்பட்டு ஆராட்டு உற்சவம் செய்யப்படும்.

பிறகு ஐயப்பனை அலங்கரித்து பம்பா விநாயகர் கோவில் முன்பு மக்கள் தரிசனத்துக்காக 3 மணி நேரம் வைப்பார்கள்.

சபரிமலை வர இயலாத 50 வயதுக்குட்பட்ட பெண்கள் இந்த சமயத்தில், ஐயப்பனின் உற்சவர் திருமேனியை தரிசிக்க முடியும்.

# பஞ்சாங்க நமஸ்காரம்



இந்த வகையான வழிபாட்டு முறை பெண்களுக்கு உரிதானது. இப்படி இறைவனை வணங்கும்போது, பெண்கள் தங்களுடைய பஞ்ச அங்கங்கள் (பஞ்சம்=ஐந்து, அங்கம் உடற்பாகம்) தரையில் படும்படி விழுந்து வழிபாடு செய்ய வேண்டும்.

இந்த முறையில் தலை, இரண்டு முழங்கால்கள், இரண்டு பாத நுனிகள் பூமியில்படும்படி விழுந்து வணங்க வேண்டும். இப்படி வழிபாடு செய்வதால் இறைவனுடைய பூரண நல்லாசி கிடைக்கும்.

# அஷ்டாங்க நமஸ்காரம்



இந்த வகையில் இறைவனை வணங்குவது ஆண்களுக்கு மட்டுமே உரிதானது. இந்த வழிபாட்டு முறையில் அஷ்டாங்கமும் (அஷ்டம்=எட்டு, அங்கம்=உடற்பாகம்) தரையில் படும்படியாக விழுந்து, இறைவனிடம் தன்னை முழுமையாக ஒப்படைத்து வணங்க வேண்டும்.

தலை, முகம், இரண்டு தோள் பட்டைகள், உடல், இரண்டு முழங்கால்கள் மற்றும் பாத நுனி ஆகிய எட்டு பகுதிகளும் தரையில் படும்படியாக படுத்துக் கொண்டு இறைவனின் திருப்பாதத்தை சரணடைவதாக நினைத்து வணங்க வேண்டும்.

இந்த வகை வழிபாட்டால், நம்முடைய வாழ்வில் உண்டான பாவங்கள் நீங்கி நமக்கு நற்கதி கிடைக்கும்.

# தானமும் தர்மமும்

மகாபாரதத்தில் உடலைப் பிரிந்த கர்ணனின் உயிரானது, தன் தந்தை சூரிய தேவனுடன் பரம் பொருள் ஈசனை வணங்கி மகிழ்ந்து சுவர்க்க பேறு பெற்றது. சூரிய தேவனுக்கோ மனதில் மிகப் பெரிய ஐயம் கலந்த வேதனை. எவரிடம் கேட்பது? எவர் தெளிவாகக் கூறுவார்கள்? குழப் பத்திலும், கோபத்திலும் சூரியனின் வெப்பம் அதிகரித்தது. இதை உணர்ந்த ஈசன் அவர் முன் எழுந்தருளினார்.

சூரியனே! என்ன தடுமாற்றம் உன் மனதில்? என்று கேட்டார்.

பரம்பொருளே! பலவிதமான தான தருமங்கள் செய்து புண்ணியங்களையும் சேர்த்து வைத்த என் மகன் கர்ணனை, போரில் கொன்றது விதி என்று ஏற்றுக் கொண்டேன். ஆனால்' எல்லா புண்ணியங்களையும் கிருஷ்ணருக்கு தான மாக தந்தபடியால், அவன் இன்னும் பெரிய புண்ணியவான் ஆகிவிடுகிறானே!. பிறகு எப்படி அவனுக்கு மரணம் ஏற்பட்டது? இது அநீதி அல்லவா? எனக் கேட்டார் சூரிய தேவன்.

இறைவன் சிரித்துக் கொண்டே... சூரியனே!... நிறைய மனிதர்களுக்குள் ஏற்படும் சலனமே உன்னை இந்தக் கேள்வியை எழுப்ப வைத்துள்ளது. சொல்கி றேன் கேள்...

தானம் என்பது பிறருக் குத் தேவையானவற்றை அவர் கேட்டோ, அடுத் தவர் அவர் நிலை கூறி, அறிந்தபின்னோ தருவது. இதுதான் தானம். புண் ணியக் கணக்கில் சேராது. ஏனெனில்,.. இல்லாதவர் மற்றும் இயலாதவர் கேட்டபின் கொடையளிப்பது, ஒரு மன்னனின் கடமை. ஒவ்வொரு மனிதனின் கடமையும் கூட...

ஆனால்...

தர்மம் என்பது, எவரும் கேட்காமல், அவரே அறியாமல், அவர் நிலை அறிந்து கொடுப் பது. இதுதான் புண்ணியம் தரும். பசித்திருக்கும் ஒருவர் கேட்டபின் ஏதாவது தருவது தானம். அவர் கேட்காமலேயே அவர் பசியாற்றுவது தர்மம்.

கர்ணன் தர்மங்கள் செய்து புண்ணியங்களை ஈட்டியவன்தான். ஆனால்' மொத்த புண்ணியத் தையும் கிருஷ்ணர் தானமாகக் கேட்டுத்தான் வாங்கினாரே தவிர தர்மமாக பெறவில்லை.

எல்லா புண்ணியங்களையும் தானமாகத் தாரை வார்த்து தந்த பிறகு, கர்ணனும் ஒரு சாதாரண மனிதனானான். அதனாலேயே மரணம் அவனை எளிதாய் நெருங்கியது என்றார் ஈசன். ஈசனை வணங்கிய சூரியத் தேவன், புரிந்தது இறைவா! தானமும், தர்மமும், பாவமும், புண்ணியமும் எல்லாமும் நீயே! என்பதும் புரிந்தது என்றார்.

கேட்டு கொடுப்பது தானம்.
கேட்காமல் அளிப்பது தர்மம்!





# இராமாயணமும் நவவித பக்தியும்

பகவானிடம் பக்தி கொள்பவர்கள் அனைவரும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் என்பதில்லை.

பக்தி என்பது அவரவர் மனோபாவத்திற்கு ஏற்றதாக அமைகிறது. இப்படி பக்தியை ஒன்பது விதமாக வகைப்படுத்தமுடியும். அந்த ஒன்பது வகை பக்திக்கு இராமாயணத்தில் உள்ள கதா பாத்திரங்களில் ஒன்பது பேரை உதாரணமாக கூறலாம்.

ஆன்மிகமலர்.காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!

**I.சிரவணம்**

பகவானுடைய நாமங்களையும், அவனுடைய கல்யாண குணங்களையும் கேட்பது.

இதற்கு உதாரணமாக, அனுமார் இராம நாமத்தை உச்சரித்துக் கொண்டே இருந்தவர்.

**2.கீர்த்தனம்**

பகவானின் பெருமைகளைப் பேசுவது..

இதற்கு உதாரணமாக, வால்மீகியை கூறலாம், இராமாயணத்தில் இராமபிரானின் பெருமைகளை மிக அழகாக எழுதியிருக்கிறார்.

**3. ஸ்மரணம்**

எப்பொழுதும் பகவானை நினைத்துக் கொண்டிருப்பது

இதற்கு உதாரணமாக, சீதையை குறிப்பிடலாம், அசோகவனத்தில் சிறை வைக்கப்பட்ட சீதை, இராமனால் மீட்கப்படும் வரை இராமபிரானையே தன் நினைவில் வைத்து வாழ்ந்ததை குறிப்பிடலாம்.

**4. பாத சேவனம்**

பகவான் கால்களில் விழுந்து வணங்குவது.

இதற்கு உதாரணமாக, பரதனை குறிப்பிடலாம், இராமபிரானின் பாதுகையையே இராமனாக நினைத்து வணங்கியவன்.

### 5. வந்தனம்

பகவானை வணங்குவது, அவனைப் போற்றுவது.

இதற்கு உதாரணமாக, வீபீஷணனை குறிப்பிட லாம், இராவணனின் தம்பியானவன், ஆனாலும் இராமனையே வணங்கி வந்தான்.

### 6. அர்ச்சனம்

பகவானுக்கு மலர்களையும், கனிகளையும் கொடுத்து மகிழ்வது.

இதற்கு உதாரணமாக, சபரியை குறிப்பிட லாம், இராமனுக்கு நல்ல பழங்களைக் கொடுக்கவேண் டும் என்பதற்காக ஒவ்வொரு பழத்தையும் தானே கடித்துப்பார்த்து, சுவை இருந்தால் மட்டுமே இராமனுக்கு அளித்தால், எச்சில் என்பதை மறந்து பக்தியை மட்டுமே மனதில் நிறுத்தியவள் சபரி.

### 7. தாஸ்யம்

பகவானின் வேலைக்காரனாக நடந்து கொள் வது.

இதற்கு உதாரணமாக, இராமபிரானின் தம்பியான இலட்சுமணனை குறிப்பிடலாம். இராமனுடனேயே இருந்து அவருக்கு சேவை செய்து, இராமனின் சொல்படிநடந்து கொண்டவர்.

### 8. ஸக்யம்

பகவானிடம் நட்பு கொள்வது.

இதற்கு உதாரணமாக, சுக்ரீவனை கூறலாம், சுக்ரீவன் இராமனுடன் அற்புதமான நட்பு கொண் டவன்.

### 9.ஆத்ம நிவேதனம்

பகவானுக்காகத் தன் உயிரையே தியாகம் செய்வது.



இதற்கு உதாரணமாக, ஜடாயுவை குறிப்பிட்டு சொல்லலாம், இராவணனிடமிருந்து சீதையைக் காப்பாற்ற முயன்று தன் உயிரைக் கொடுக்கும் அளவிற்கு தாக்கப்பட்ட நிலையிலும், இராம பிரானை பார்த்து நடந்தவற்றை கூறிய பின் அவரது மடியிலேயே தனது உயிரை விட்ட செயலை ஆத்ம நிவேதனத்திற்கு இணையாக கூறலாம்.

# கனவும், கனவு பலிக்கும் கால நேரமும்

நாம் காணும் ஒவ்வொரு கனவுகளுக்கும், ஒவ்வொரு பலன்கள் உண்டு. அதிலும், நாம் கண்ட கனவுகளின் நேரத்தை பொருத்து அதன் பயன்கள் அமையும்.

- இரவில் மாலை 6 – 8.24 மணிக்குள் கண்ட கனவு ஒரு வருடத்திலும்,
- இரவு 8.24 – 10.48 மணிக்குள் கண்ட கனவு 3 மாதத்திலும்,
- இரவு 10.48 – 1.12 மணிக்குள் கண்ட கனவு 1 மாதத்திலும்,
- இரவு 1.12 – 3.36 மணிக்குள் கண்ட கனவு 10தினங்களிலும்,
- விடியக்காலை 3.36 – 6.00 மணிக்குள் கண்ட கனவு உடனடியாக பலிக்கும் என்று 'பஞ் சாங்க சாஸ்திரங்கள்' கூறு கின் றன.

பகல் கனவு காண்பவர் களும் உண்டு. ஆனால், பகலில் காணும் கனவு கள் பலிப்பதில்லை.



# கங்கையைவிட புண்ணியமானவர்கள் இறையடியார்கள்

கங்கை நதிக்கரையில் இருந்து 4 மைல் தூரத்தில் உள்ள சிறிய கிராமத்தில் புண்ணியதாமா என்ற அந்தணர் வசித்து வந்தார். அதே ஊரில் பிருஹத்தபா என்ற பெரும் தவசியும் வாழ்ந்து வந்தார்.

அவர் தினமும் மாலை வேளைகளில் இறைவனின் லீலைகளை, ஹரி கதையாக கூறுவார். அந்த கதைகளை புண்ணியதாமா தவறாமல் கேட்டு விடுவார். தனது அன்றாட பணிகளை முடித்துக் கொண்டு, பிருஹத்தபா கூறும் கதையை கேட்க கிளம்பிவிடுவார். தனது நூறாண்டு கால வாழ்க்கையில் ஒரு நாள் கூட அவர் ஹரி கதையை கேட்க தவறியதில்லை.

அன்றாட பணிகளை முடிப்பது, ஹரி கதையை கேட்பது, உணவு கேட்டு, தங்க இடம் கேட்டு வரும் அதிதிகளை உபசரிப்பது என்பவையே அவரது தலைசிறந்த பணியாக இருந்தது.

கங்கையில் இருந்து 4 மைல் தூரத்தில் இருந்தாலும் ஒரு நாள் கூட புண்ணியதாமா கங்கையில் நீராடியதில்லை.

அவருக்கு அது பற்றிய சிந்தனையும் இருந்ததில்லை.

ஒரு முறை வெகு தொலைவில் இருந்த இரண்டு யாத்திரிகர்கள், கங்கா ஸ்நானம் செய்வதற்காக காசி நோக்கி சென்று கொண்டிருந்தனர். இரவு நேரம் ஆகி விட்டதால் வழியில் எங்காவது தங்கி மறுதினம் பயணத்தை தொடர இருவரும் நினைத்தனர்.

அருகில் இருந்த புண்ணிய தாமாவின் வீட்டிற்கு சென்று, ‘வீட்டு திண்ணையில் தங்க இடம் கிடைக்குமா?’ என்று கேட்டனர்.

அவர்கள் இருவரையும் யாத்திரிகர்கள் என்று தெரிந்து கொண்ட புண்ணியதாமா, வீட்டிற்குள் அழைத்துச் சென்று தனது மனைவியிடம் கூறி அன்னம் பரிமாறக் கூறினார்.

இரண்டு யாத்திரிகர்களும் உணவருந்துவதற்காக அமர்ந்தனர்.

அப்போது அவர்கள், புண்ணியதாமாவிடம், ‘ஐயா! நாங்கள் காசிக்கு சென்று கங்கையில் நீராட உள்ளோம். இங்கிருந்து கங்கை எவ்வளவு தூரத்தில் உள்ளது என்று கூறமுடியுமா?’ என்று கேட்டனர்.

அதற்கு புண்ணியதாமா, ‘நான் நூறு ஆண்டுகளாக இந்த கிராமத்தில் இருக்கிறேன். இங்கிருந்து 4 மைல் தூரத்தில் கங்கை நதி இருப்பதாக, பிறர் சொல்ல நான் கேள்விப்பட்டுள்ளேன். உண்மையை கூறவேண்டும் என்றால், இதுவரை நான் ஒருமுறை கூட கங்கையில் ஸ்நானம் செய்தது



கிடையாது’ என்றார்.

ஒரு கணம் திகைத்த அந்த அதிதிகள்,மறுகணம் அன்னத்தை நிராகரித்து எழுந்து விட்டனர்.

‘பல ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்து கொண்டு கங்கா! என்று சொன்னாலும் கூட பாவங்கள் விலகிவிடும்.

இவர் என்னடா என்றால், அருகிலேயே இருந்து கொண்டு கங்கையில் நீராடவில்லை என்கிறார். இவரை விட பாவி யாரும் இருக்க முடியாது. இவ்வளவு சமீபத்தில் இருந்து கொண்டு கங்கா ஸ்நானம் செய்யாதவரின் வீட்டில் நாம் அதிதி களாக தங்கியதே மகா பாவம்’ என்று நினைத்து வீட்டை விட்டு உடனடியாக வெளி யேறினர்.

அவர்களின் செய்கையைக் கண்டு புண் ணிய தாமாவின் மனம் மிகவும் துயரத்தில் ஆழ்ந்துவிட்டது.

ஆனால் அந்த இரு யாத்திரிகர்களும், ‘கங்கையில் நீராடாதவரின் வீட்டில் தங்கியிருந்த பாவத்தை கங்கையில் நீராடிதான் போக்க வேண்டும்’ என்று தங்களுக்குள் பேசியபடியே கங்கை நதியை நோக்கி வேகமாக நடைபோட்டுச் சென்றனர்.

கங்கை நதிக்கரையை அவர்கள் அடைந்த போது கண்ட காட்சி அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

கங்கை நதி வறண்டுபோய் கிடந்தது.

அதில் ஒரு சொட்டு தண்ணீர் கூட இல்லை. கானல் நீர் கூட தென்படவில்லை. கங்கை நதிக்கரை ஓரமாகவே நடந்து கங்கை உற் பத்தி யாகும் இடம் வரை சென்று விட்டனர் அவர்கள்.

ஆனாலும் அவர்களால் கங்கையை காணமுடியவில்லை.

‘எவ்வளவு தூரத்தில் இருந்து வந்திருக்கிறோம். நம்மால் கங்கையில் நீராட முடியாத நிலை ஏற்பட்டுவிட்டதே! நாம் ஏதோ அபவாதம் செய்து விட்டதாக தெரிகிறதே!’ என்று புலம்பத் தொடங்கி விட்டனர்.

பின்னர் கங்கா தேவியை மனதார நினைத்து, ‘தாங்கள் செய்த குற்றத்தை பொறுத்து தங்க ளுக்கு காட்சி தர வேண்டும்’ என்று மனமுருக வேண்டினர்.

அப்போது அவர்கள் முன் தோன்றிய கங்கா தேவி, ‘என்னை காணும் தகுதியை நீங்கள் இழந்து விட்டீர்கள்.

மிகவும் பாக்கியசாலியும், புண்ணியவானுமான, புண்ணியதாமாவை இருவரும் சேர்ந்து நிந்தித்து விட்டீர்கள்.

ஹரி கதை எங்கெல்லாம் நடக்கிறதோ அங்கெல்லாம் அனைத்து தீர்த்தங்களும் இருக் கின்றன.



அதே போல் ஹரி கதையை தொடர்ந்து கேட்பவர்கள் புனிதத்திலும் புனிதம் அடைந்தவர் ஆகிறார்கள்.

அத்தகைய சிறப்பு மிக்க புண்ணியவானின் பாதங்கள் என் மீது படாதா என்று பல காலங் களாக நான் காத்திருக்கிறேன்.

நீங்களானால் அவரது மனம் புண்படும்படி நடந்து கொண்டு வந்திருக்கிறீர்கள். புண்ணிய தாமாவிடம் சென்று மன்னிப்பு கோருங்கள்.

அதுவரை உங்களால் கங்கையில் நீராட முடியாது’ என்று கூறி மறைந்து விட்டாள்.

தங்கள் தவறை உணர்ந்து கொண்ட இரு வரும் உடனடியாக, புண்ணியதாமாவிடம் சென்று அவரது காலில் விழுந்து தங்கள் தவறை பொறுத்துக் கொள்ளும்படி கேட்டனர்.

அவர்களை அரவணைத்துக் கொண்ட புண்ணியதாமா, இருவரையும் பிருஹத்தபாவிடம் அழைத்துச் சென்று இரண்டு ஆண்டுகள் ஹரி கதை கேட்கும்படியாக செய்தார்.

பின்னர் அனைவரும் சென்று கங்கையில் நீராடி மகிழ்ந்தனர்.

ஆயிரம் பிரம்மஹத்தி தோஷத்திற்கும் கூட பிராயச்சித்தம் என்பது உண்டு. ஆனால் பகவானின் பக்தனை நிந்திப்பவனுக்கு எந்த பிராயச்சித்தமும் இல்லை என்பதை உணருங்கள்.

# இருக்கும் சூழலை ரசித்தால் வாழ்க்கை சொர்க்கமாகும்

புத்தரின் தலைமை மடாலயத்தில் நிகழ்ந்த சுவையான சம்பவம்.

அடிப்படை சந்நியாஸப் பயிற்சியை வெற்றி கரமாக முடித்த சந்நியாஸிகள், தியானத்தை மக்களுக்குக் கற்றுத்தந்து, மக்கள் முன்னேற்றம் பெறுவதற்காக நாடு முழுவதும் சேவைக்காக புறப்படும் நேரம் வந்தது.

அதில் பூர்ணகாஷ்யபா எனும் சந்நியா ஸிக்கு மட்டும் எங்கு செல்வது என்று சொல்லப் படவில்லை.

பூர்ணகாஷ்யபா நேரடியாய் புத்தரிடமே சென்று கேட்டார், "நான் எங்கு செல்லட்டும்?"

புத்தர் சிரித்தபடி சொன்னார், "நீயே தேர்வு செய்யப்பா."

இந்தியாவின் ஒரு குறிப்பிட்ட பகுதிக்கு தான் செல்ல விரும்புவதாக சொன்னார்.

சீடனைப் பார்த்து மிகவும் ஆச்சரியப்பட்டவராய் புத்தர் கேட்டார், "அந்தப் பகுதிக்கா? அங்கே வாழும் மனிதர்கள் மிகவும் முரடர்கள். சின்ன சின்ன பிரச்னைக்கெல்லாம் அடிதடி சண்டையில் இறங்குபவர்கள், கொஞ்சம் கூட பக்தியோ, தியான உணர்வோ இல்லாதவர்கள். இப்படி பொல்லாதவர்களிடமா போக விரும்புகிறாய்?"

"ஆமாம்" என்று தைரியத்தோடு சொன்ன சீடனிடம் புத்தர் சொன்னார்ஞ் "உன்னிடம் மூன்று கேள்விகளை கேட்க விரும்புகின்றேன். இந்த மூன்று கேள்விக்கும் சரியான பதில் சொல்லிவிட்டால் நீ போகலாம்."

"ம்... சரி..."

"முதல் கேள்வி, அங்கே சென்ற பிறகு உன்னை வரவேற்பதற்கு பதில் அவமானப்படுத்தினால் என்ன செய்வாய்?"

"ரொம்ப ஆனந்தப்படுவேன். ஏனென்றால், அவர்கள் என்னை அடிக்கவில்லை; உதைக்க வில்லை.

திட்டுவதோடு நிறுத்திக் கொண்டார்களே; மிகவும் நல்லவர்கள் என்று நன்றி சொல்வேன்."

"இரண்டாவது கேள்வி. ஒருவேளை திட்டாமல் அடித்து உதைத்தால் என்ன செய்வாய்?"

"அவர்கள் மிகவும் நல்லவர்கள். அதனால்தான் என்னைக் கொல்லாமல் விட்டுவிட்டார்கள். வெறு



மனே அடித்ததோடு நிறுத்திக் கொண்டார்களே! என ஆனந்தப்படுவேன்."

"மூன்றாவது கேள்வி. ஒருவேளை உன்னைக் கொன்றுவிட்டால் என்ன செய்வாய்?"

"ஆஹா இன்னும் ஆனந்தப்படுவேன். மொத்த மாக இந்த வாழ்க்கையில் இருந்தே எனக்கு சுதந்திரம் தந்துவிட்டார்கள். இனி எதைப் பற்றி யும் கவலைப்பட வேண்டிய அவசியமே இல்லை என்று மிகவும் ஆனந்தப்படுவேன்" என்று சொன் னதும்,

"நன்றாக தேறிவிட்டாய். அங்கு மட்டுமல்ல எங்கு சென்றாலும் நீ வாழ்ந்து விடுவாய். எதனாலும் இனி உன்னை வீழ்த்தமுடியாது. எப்போதும் ஆனந்தமாயிருக்க பக்குவப்பட்டுவிட்டாய். எங்கு சென்றாலும் நல்லாயிருப்பாயப்பா. போய் வா" என்று ஆசிர்வதித்து அனுப்பினார் புத்தர்.

எந்தச் சூழலையும் ஆனந்தமாக அணுகக் கற்றுக் கொண்டால், எந்த சூழலையும் ஆனந்த மயமாக்கிட முடியும்.

இல்லாவிட்டால் ஆனந்தமயமான சூழல்கள் வாய்த்தால்கூட, அதிலும் ஏதாவது துக்கம் இருந்து கொண்டே இருக்கும்.

# ஆன்மிகத் தகவல்களை

**எளிமையாக, பாமரர்களும் புரிந்து கொள்ளும் வகையில்**

**ஆன்மிகமலர்** மெயில்

**புத்தகத்தில்** (e-book)

**வெளியிட்டு வருகிறோம்...**

eBook DOWNLOAD

eBook DOWNLOAD

eBook DOWNLOAD

free

இதுவரை வெளிவந்த

**145** க்கும் மேற்பட்ட

**இதழ்களை**




**aanmeegamalar.**

**இணையதளத்தில் இலவசமாக படிக்கலாம்.**





# மனித சீரத்துடன் தொடர்புடைய வலம்புரி, இடம்புரி விநாயகர்

வலம்புரி விநாயகர், இடம்புரி விநாயகர் என்று இரண்டு விதமாக விநாயகரை குறிப்பிட்டு கூறுவார்கள். இந்த இரண்டு விநாயகரையும் மனித மூளையுடன் தொடர்புபடுத்தியும் கூறலாம்.

மனிதர்களின் மூளை வலப்பகுதி, இடப்பகுதி என இரண்டு பிரிவுகளாக உள்ளது. இதில் இடப்பக்க மூளை, உடலின் வலது பாகத்தையும், வலப்பக்க மூளை, உடலின் இடது பாகத்தையும் கட்டுப்படுத்துகிறது. இதையே பிங்கலை, இடங்கலை, நாடிகள் என நாம் வரையறுக்கிறோம்.

உடலின் செயல் வலது, இடது என பிரிக்கப் பட்டு செயல்படுகிறது. உங்கள் வலது பக்க மூளை செயல்படும் பொழுது உங்கள் இடது நாசி துவாரத்தில் சுவாசம் வரும்.

அதே போல இடது பக்க மூளை இயங்கும் பொழுது வலது நாசியில் சுவாசம் வரும் என்று நாடி சாஸ்த்திரம் தெளிவாக கூறியுள்ளது.

இந்த நாடி சிந்தாந்தத்தை குறிக்கும் வகையில் தான் விநாயகரின் துதிக்கையை வலம்புரி யாகவும் இடம்புரியாகவும் நமது முன்னோர்கள் அமைந்திருக்கின்றார்கள்.

இனி கோவிலில் விநாயகரை வணங்கும் பொழுது உங்களின் நாசியில் வரும் சுவாசத்தை கவனியுங்கள்.

விநாயகரின் துதிக்கை எந்த பக்கத்தில் இருக்கிறதோ அந்த பக்கம் உங்களின் நாசியில் சுவாசம் வரும்.

வலம்புரி விநாயகராக இருந்தால் உங்கள்வலது நாசியிலும், இடம்புரி விநாயகராக இருந்தால் உங்கள் இடது நாசியிலும் சுவாசம் வருவதை காணலாம்.

வெளியே இருக்கும் நான் தான் உன் உள்ளே யும் இருக்கிறேன் என பிள்ளையார் கூறும் விஷயம்தான் இது.

வலது நாசியின் வழியாக உள்ளே செல்லும் காற்றிற்கு சூரிய கலை என்றும்; இடது நாசியின் வழியாக உள்ளே செல்லும் காற்றிற்கு சந்திர கலை என்றும் நமது முன்னோர்கள் பெயர்

சூட்டியுள்ளனர். இந்த இரண்டு சுவாசங்களுக்கும் தனித் தனிப் பண்புகளும் வெவ்வேறு வகையான செயல்பாடுகளும் உள்ளன.

**வலது நாசிக் காற்று (சூரிய கலை)**

- உடலுக்குத் தேவையான வெப்ப சக்தியைத் தருகின்ற பிராணன் இதுவே.
- வலது நாசியின் வழியாக சுவாசம் நடைபெறும் காலகட்டத்தில் உடலின் வெப்ப நிலை சற்றே உயரும்.
- உடல் சுறுசுறுப்படையும்; சோர்வு அகலும்.
- உடலின் வலிமை அதிகரிக்கும்.
- மூளையும் உடலும் பரபரப்பாக இயங்கும்.
- இந்த இரண்டு மணி நேரத்தில் நிதானம் குறைவாகவும், வேகம் அதிகமாகவும் இருக்கும்.

**இடது நாசிக் காற்று (சந்திர கலை)**

- உடலைக் குளிர்விக்கும் தன்மை கொண்டது.
- சந்திரனைப் போன்றே இந்த மூச்சுக் காற்றும் குளுமையானதாகும்.
- இடது நாசி வழியே சுவாசம் நடைபெறும் வேளையில் உடலின் வெப்ப நிலை சற்றே குறைந்து, உடல் குளிர்ச்சியடையும்.
- பரபரப்புத் தன்மை குறைந்து, மனதிலும் உடலிலும் ஒரு சாந்தத் தன்மை உருவாகும்.
- மூளை அமைதியாக சிந்திக்கத் துவங்கும்.
- அவசரத் தன்மை மறைந்து, நிதானமான மனநிலை நிலவும்.

விநாயகப்பெருமானின் கல் விக்ரஹத்திற்கு உங்கள் சுவாசம் சம்பந்தப்பட்ட சூரிய கலை மற்றும் சந்திர கலைகளை மேம்படுத்தும் இத் தகைய ஆற்றல் இருப்பதால் தான் அவரை முதலில் வணங்க வேண்டும் என்கிறார்கள்.

மேலும், பிராண சக்தியாக விநாயகர் உள்ளதால், பிராணனை சுத்தப்படுத்தவே அரசமரத்தடியில் அமரச்செய்து அவரை வழிபடுகின்றோம்.

அரசமரம் நாளொன்றுக்கு 2,400 கிலோ பிராண வாயுவை வெளிப்படுத்துகின்றது. இதை பெண்கள் அதிகளவு சுவாசிக்கும்போது, கருப்பை கோளாறுகள் நீங்குகின்றன. மேலும் மூளையின் செயல்பாடுகளை தூண்டி, ஆண்-பெண் பேதமின்றி அனைவருக்கும் மன அமைதியையும் தருகின்றது.

**விநாயகர் பற்றி...**

- விநாயகரின் மகிமையை எளிமையாக சொல்ல வேண்டும் என்றால் பிள்ளை யாருக்கு பிறப்பில்லை.
- அதனால் தான் நாம் விநாயகர் ஜெயந்தி என கொண்டாடுவதில்லை. விநாயகர் சதுர்த்தி என கொண்டாடுகிறோம்...!
- 'ஓம்' என்ற பிரணவ மந்திரத்தை குறிக்கும் வலம்புரி விநாயகர்
- வலம்புரி விநாயகர் ஒரு சில குறிப்பிட்ட ஆலயங்களில் மட்டுமே வழிபட முடியும்.
- வலம்புரி விநாயகருக்கு என்று ஓர் சிறப்பம் சம் உண்டு.
- இதில், தும்பிக்கையின் வளைவு 'ஓம்' என்ற பிரணவ மந்திரத்தின் அமைப்பை ஒத்துள்ளது.
- வாய் பகுதியின் வலது ஓரம் ஆரம்பித்து கன்னம், மத்தாம் தொந்தி வழியாக சுழன்று தும்பிக்கை வளைந்து இருக்கும்.
- வலம்புரி சங்கை தனது தும்பிக்கையில் வலது பக்கம் வைத்திருந்ததாலும்




விநாயகரை வலம்புரி விநாயகர் என்று அழைக்கின்றனர்.

- வலம்புரி விநாயகர் கோவில்களில் சில மிகவும் பழமையான வரலாற்று சிறப்பு மிக்கவையாக உள்ளன.
- தமிழகத்தின் பழமையான பிள்ளையார் கோவிலான பிள்ளையார்பட்டி விநாயகர் வலம்புரி விநாயகர் தான்.
- வலம்புரி விநாயகரை வழிபட வேண்டிய வரங்களை பெறலாம்.
- வினைகளை தீர்க்கும் இடம்புரி விநாயகர்
- விநாயகரின் தும்பிக்கை இடது பக்கமாக சுழித்தபடி இருப்பின் இடம்புரி விநாயகர் எனப்படுவார்.
- பொதுவாக சிற்ப சாஸ்திரத்தில் வினை தீர்க்க கூடியவர் என கூறப்படுகிறது.
- மேலும், இடர்களை தீர்ப்பவர் இடம்புரி விநாயகர் என பேச்சு வழக்கில் கூறுவர்.
- அனைத்து ஆலயங்களிலும் இடம்புரி விநாயகரே அருள் புரிவார்.

# மாதம் தோறும் 2 புத்தகங்கள்




e-magazine இதழ்

படியுங்கள் இலவசமாக

# aanmeegamalar.com

# ஆன்மிகமலர்.காம்





# வாலாஜாபேட்டை ஸ்ரீ தன்வந்திரி ஆரோக்ய பீடத்தில்

# தாய் ஸ்ரீ மூகாம்பிகைக்கு ஆலயம்

வாலாஜாபேட்டை ஸ்ரீ தன்வந்திரி ஆரோக்ய பீடத்தில் ஸ்தாபகர் மற்றும் பீடாதிபதி யக்ஞஸ்ரீ கயிலை ஞானகுரு டாக்டர். ஸ்ரீமுரளிதர ஸ்வாமிகளின் ஆக்ஞைப்படி, மூலவர் தன்வந்திரி பகவானுக்கு கடந்த நவம்பர் 28ம்தேதி (திங்கள் கிழமை) முதல் தைலாபிஷேகம் தொடங்கி நடைபெற்று வருகிறது. இந்த தைலாபிஷேகம் வருகிற டிசம்பர் 8ம்தேதி முடிய காலை 9 மணி முதல் மதியம் 1 மணி வரை நடைபெறுகிறது.

தைலாபிஷேகம் 3 வது நாளன்று விசாகப்பட்டிணம் மௌனானந்த தபோவனம்,ஸ்ரீ சௌபாக்ய புவனேஸ்வரி பீடம் , ஸ்ரீ ராமானந்த பாரதி ஸ்வாமிகள், தன்வந்திரி பீடத்திற்கு வந்து தன்வந்திரி பெருமாளுக்கு தைலாபிஷேகம் செய்து வழிபட்டார்.

பின்னர் தன்வந்திரி ஆரோக்ய பீடத்தில் விரைவில் புதியதாக அமைய உள்ள ஸ்ரீ வீரபத்திரர், ஸ்ரீ தாய் மூகாம்பிகை ஆலயங்களுக்காக சிறப்பு பூஜை நடத்தி, விரைவில் திறக்கப்பட உள்ள ஸ்ரீ கருட கங்கா தீர்த்தக்குளத்தையும் பார்வையிட்டு ஆசிர்வசித்தார். பின்னர் 2023–ம் ஆண்டிற்கான தன்வந்திரி ஆரோக்ய பீடத்தின் காலண்டரையும் வெளியிட்டார்.

முன்னதாக அவருக்கு தன்வந்திரி ஆரோக்ய பீடத்தின் சார்பில் பூர்ணகும்ப மரியாதையுடன் வரவேற்பு அளிக்கப்பட்டது. தைலாபிஷேகத்தில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு மூலவர் தன்வந்திரி பகவானை தரிசனம் செய்து, அபிஷேக நல்லெண்ணெய்யை பிரசாதமாக பெற்று சென்றனர்.

தன்வந்திரி ஆரோக்ய பீடத்தில் சைவம், வைணவம், ஸ்ரீ சாக்தம், சௌரம், கௌமாரம், காணாபத்யம் என ஷண்மதத்திற்குரிய தெய்வங் களுக்கும் என மொத்தம் 89 திருச்சன்னதிகள் அமையபெற்று, தினந்தோறும் பல்வேறு வகை யான யாகங்கள் நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில் புதியதாக ஸ்ரீ தாய் மூகாம்பிகைக்கும் ஆலயமும் அமைய உள்ளது.

ஸ்ரீ தாய் மூகாம்பிகை ஆலயம் அமைப்பதற் கான பூமி பூஜை நிகழ்ச்சி டிசம்பர் 2ம்தேதி வெள்ளிக்கிழமை நடைபெற்றது. பூமி பூஜையை முன்னிட்டு சிறப்பு ஹோமம் நடத்தப்பட்டு புனித கலசங்களில் நீர் கொண்டு வரப்பட்டு பூஜைகள் நடைபெற்றது.

டிசம்பர் 3ம்தேதி சனிக்கிழமை கார்த்திகை மாத ஏகாதசி, கார்த்திகை மாத ஏகாதசி நாளில் தான் குருசேத்திரத்தில் கிருஷ்ணன், அர்ஜுனனுக்கு கீதையை உரைத்தார். எனவே கீதா ஜெயந்தியும் இந்த நாளில் கொண் டாடப்பட்டது.

ஏகாதசியை முன்னிட்டு ஸ்ரீ தன்வந்திரி ஆரோக்ய பீடத்தில் சிறப்பு பூஜைகள் நடத்தப் பட்டு. பக்தர்களுக்கு பகவத் கீதை புத்தகம் இலவசமாக வழங்கப்பட்டது

– கீதாராஜன்

தொடர்பு எண்: 9444228203

# மனித உடலை ஆட்சிசெய்யும் பத்து விதமான வாயுக்கள்



ஒவ்வொரு மனிதர்களுக்கும் ஆக்ஸிஜன் என்ற வாயு எவ்வளவு அவசியம் என்பது அறிந் திருப்போம்.

உடம்பில் நவ துவராங்கள் இருப்பது எப்படியோ அதே போல தச வாயுக்கள் உள்ளன. மனித உடலிற்குள் இந்த பத்து விதமான வாயுக்கள் சுற்றிச் சுற்றி வந்து ஆட்சி செய்கிறது. இவற்றில் வரும் ஏற்ற தாழ்வுகள் உடலில் பலவிதமான வியாதிகளை உருவாக்குகிறது. உடம்பில் சின்ன சின்ன வலிகள் பிடிப்புகள் ஏற்பட்டால் கூட வாயு பிடிப்பு என்று சொல்வது அதனால்தான். தும்மல், விக்கல், இருமல் என அனைத்து வேலைகளை செய்வதும் இந்த வாயுக்கள்தான்.

இந்த வாயுக்களைப் எந்த எந்த பாகத்தில் வேலை செய்கிறது என்பதை பார்ப்போம்.

## 1.பிராணன்

மூலாதரத்தில் ஆரம்பித்து மூக்கு வழியாகமூச்சு விடல், பூச உதவமு குரல்வளையில் உள்ளது. கை, கால்களை வேலை செய்ய பெரு விரல் உள்ளது.

## 2.அபானன்

சுவாதிட்டானத்தில் இருந்து வெளிப்பட்டு மலத்தை கீழ் நோக்கி தள்ளும், ஆசனவாயை சுருக்கும். அன்னத்தை சேர்க்க வேண்டிய இடத் தில் சேர்க்கும். குறியில் காம வேகத்தை உண்டு பண்ணும்.

## 3.வியானன்

தோளிலிருந்து எல்லா நரம்பிலும் அசையும் அசையாபொருளில் உருப்புக்களைநீட்ட மடக்க உணர்ச்சிகளை அறியவும் உணவின் சாரத்தை கொடுத்து உடலைக்காக்கும்.

## 4.உதானன்

உணவின் சாரத்தை கொண்டு செல்லும் உடலை எழுந்து நிற்க உதவும். மேல் நோக்கி இயங்கும் வாயு.

## 5.சமானன்

நாபியிலிருந்து கால் வரை பரவும் வாயுக்களை அதிகப்படாமல் சரிசெய்யும், உணவு செரித்தவுடன் எல்லா இடங்களுக்கும் அனுப்புகிறது.

## 6.நாகன்

அறிவை வளர்க்கும், கண்களை திறப்பதற்கும், மயிர் சிலிர்க்க, இமை மூட வேலை செய்யும். வாந்தி எடுத்தால் துப்புதல் ஆகிய வேலைசெய்யும்.

## 7.கூர்மன்

மனதில் கிளம்பி, கண் இமை, கொட்டாவி, வாய் மூட, கண்திறந்து மூட, கண்ணீர் வர வேலை செய்யும்.

## 8.கிருகரன்

நாக்கில் கசிவு, நாசி கசிவு உண்டுபண்ணும், பசி வர வைக்கும், செயல் புரிய, தும்மல் இரு மலை உண்டு பண்ண.

## 9.தேவதத்தன்

சோம்பல், தூங்கி எழுகையில் அயர்ச்சி, தாக் குதல், கண்களை அசைத்தல், சண்டையிடுதல், தர்க்கம் பேசல்.

## 10.தனஞ்செயன்

மூக்கிலிருந்து உடல் முழுதும் வீக்கம் பண் ணும், காதில் கடல் அலை இரைச்சல் போல் இரைத்தல், இறந்த மூன்றாம் நாள் தலை வழியாகவெழியே செல்லுதல்.

# இறந்தவர்களின் அஸ்தியை தபால் மூலம் கங்கையில் கரைப்பது எப்படி?

உறவினர் ஒருவரின் மறைவிற்கு பின்பு அவரின் அஸ்தியை கங்கையில் கரைக்க எல்லோராலும் முடிவதில்லை, நேரில் செல்வதில் பல்வேறு சிக்கல்களை சந்திக்கவேண்டியுள்ளது, பொருளாதார, மற்றும் சில காரணங்களால நேரில் செல்ல முடியாது. ஆனால் அஸ்தியை கங்கையில் கரைக்கவேண்டும் என்ற எண்ணம் ஒரு காலகட்டத்தில் நிராசையாக நின்று விடுவதுண்டு.

இதுபோன்ற சிக்கலுக்கு தற்போது தீர்வும் உள்ளது.

"அஸ்தி விசர்ஜன்" அமைப்பும், Indian SPEED POST–ம் இணைந்து "ஓம் திவ்ய தர்ஷன்" வாயிலாக இறந்தவர்களின் அஸ்தியை கரைக்கும் சேவையை செய்து வருகிறது.

வாரணாசி, பிரயாக்ராஜ், ஹரித்வார் மற்றும் கயாவில் மரணத்திற்குப் பிந்தைய சடங்குகளைச் செய்ய அனுமதிக்கும் சமூக மத அமைப்பான "ஓம் திவ்ய தர்ஷன்", இந்த அமைப்பின் மூலம் இறந்தவரின் அஸ்தி சாம்பலை ஸ்பீட் போஸ்ட் வழியாக அனுப்பி, புனித கங்கையில் கரைக்கலாம், அவர்கள் செய்யும் சடங்குகளை நேரலையிலும் பார்க்கலாம்.

வசதியை எப்படிப் பெறுவது

1. முதலில் http://www.omdivyadarshan.org/ இல் உள்ள ஓம் திவ்ய தர்ஷன் சன்ஸ்தாவின் போர்ட்டலில் ஒருவர் இறந்தவர் பற்றிய விபரத்தை Google Form ல் பதிவு செய்து கொள்ள வேண்டும்.
2. பதிவு செய்து +91 83696 66626 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு அவர்களிடம் பேசிய பின்புதான் சாம்பல் அனுப்ப வேண்டும்.
3. பதிவுசெய்த பிறகு, சாம்பல் பொட்டலம் வாரணாசி, பிரயாக்ராஜ், ஹரித்வார்மற்றும் கயா/ஆகிய இடங்களுக்கு ஸ்பீட் போஸ்ட் மூலம் தபால் அலுவலகம் மூலம் அனுப்பப் படலாம். அதில் 'ஓம் திவ்ய தரிசனம்' என்று தடித்த எழுத்துக்களில் எழுத வேண்டும்.


Om Divya Darshan

Asthi Visarjan Registration Form

Disclaimer: Forms will only be processed if all information provided meets the guidelines and is valid. Kindly oblige by the same.

Sign in to Google to save your progress. Learn more

* Required

Important Note!
KINDLY DO NOT SEND ASTHI PACKAGES WITHOUT CALL CONFORMATION OR ADDRESS CONFIRMATION FROM OUR TEAM. OM DIVYA DARSHAN PVT. LTD. WILL NOT BE RESPONSIBLE FOR ANY SUCH PACKAGES.

Due to the winter season weather conditions have resulted in a drop in the water temperature of all holy rivers. This may cause a delay in the asthi visarjan ritual process. We hope you understand and cooperate.

Full name of the deceased *

Your answer

ஸ்பீட் போஸ்ட்டை முன்பதிவு செய்த பிறகு, அனுப்புநர் போர்ட்டலில் முன்பதிவு விவரங்களுடன் அந்த அஸ்தியை அனுப்பிய தபால் பற்றிய தகவலை புதுப்பிக்க வேண்டும்.

4. இதற்குப் பிறகு, "ஓம் திவ்ய தர்ஷன் சன்ஸ்தா", சாம்பல் மூழ்குதல் மற்றும் பிற சடங்குகளை கவனித்துக் கொள்ளும். அந்த இறுதி சடங்குகளை இறந்தவரின் குடும்ப உறுப்பினர்கள் இங்கிருந்தே இணைய ஒளி பரப்பு மூலம் பார்க்க முடியும்.

இனி இறந்தவர்களின் அஸ்தியை நமது சாஸ்திர சம்பிரதாயப்படி கங்கையில் கரைக்க மேற்கண்ட வழிமுறைகளை பயன்படுத்தி, இறந்த ஆத்மாவிற்கு கூடுதல் புண்ணியத்தை ஈட்டித் தருவோம்.

தெரியாதவர்களுக்கு இப்படி ஒரு வழிமுறை இருப்பதை எடுத்து கூறி, நாமும் புண்ணியத்தில் பங்கு கொள்ளலாம்.

# இல்லம்தோறு செழிப்பை உருவாக்கும் ஆன்மிக தகவல்கள்..!

செல்வம் நிலைக்க, விருத்தி அடைய, பணம் கொடுக்கல் வாங்கல், செவ்வாய் கிழமை, செவ்வாய் ஹோரையில் நடப்பது உத்தமம். கொடுப்பவருக்கு பணம் திரும்பக் கிடைக்கும். வாங்குபவரால் பணத்தை திரும்பக் கொடுக்க இயலும். திரும்ப கொடுப்பதும் செவ்வாய் ஹோரையில் நடப்பது சிரேஷ்டம்.

• • •

வாசற்படி, உரல், ஆட்டுக்கல், அம்மி இவை களில் உட்காரக்கூடாது.

• • •

இரவு நேரங்களில் பால், மோர், தண்ணீர் அடுத்தவர்கள் எடுத்து செல்ல அனுமதிக்கக் கூடாது. வெற்றிலை, வாழையிலை இவைகளை வாடவிடக்கூடாது. வெற்றிலையை தரையில் வைக்கக்கூடாது. சுண்ணாம்பு வெற்றிலையை போடக்கூடாது.

• • •

எரியும் குத்துவிளக்கை தானாக அணையவிடக் கூடாது, ஊதியும் அணைக்ககூடாது. புஷ்பத்தி னால் அணைக்கவேண்டும்.

• • •

வீட்டில் யாரையும் சனியனே என்று திட்டக் கூடாது. எழவு என்றும் கூறக்கூடாது.

• • •

அதிகமாகக் கிழிந்த துணிகளை உடுத்தக் கூடாது. துணிமணிகளை உடுத்திக்கொண்டே தைக்கக் கூடாது. உப்பை தரையில் சிந்தக் கூடாது. அரிசியை கழுவும் போது, தரையில் சிந்தக்கூடாது.

• • •

விளக்கை அமர்த்துதல் அல்லது மலையேற்றுதல் என்று தான் சொல்லவேண்டும். அணைப்பது என்ற வார்த்தையை உபயோகிக்கவே கூடாது. அது அமங்கலச் சொல்லாகும்.

• • •

இல்லத்தில் தீய சக்திகளை ஒடுக்க ராம நாமம் உச்சரிக்க வேண்டும். ராமநாமம் உச்சரிக்கும் வீட்டிற்கு அனுமன் தேடி வந்துவிடுவான். அனுமன் இருக்கும்போது எந்த தீய சக்தியும் பலம் இழக்கும்.


அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
SML Graphics
Sree Maha Laksmi Graphics
செல்: +91-9444228203



# இறைவனுக்கு உகந்த மலர் அர்ச்சனையும் மலர் வகைகளும்

இறைவழிபாட்டில் மிக முக்கியப் பங்காற்றுவது வாசனை மலர்கள்தான், அனைத்து அபிஷேக ஆராதனைகளும் முடிந்தவுடன், இறைவனை வாசத்துடனும், புதுப்பொழிவுடனும் மாற்ற உதவுவது மலர்கள் மட்டுமே.

இப்படி இறைவனுடன் ஒன்றிணைந்த மலர்களிலும் ஒருசில மலர்களை சாஸ்திர ரீதியாகவே உயர்ந்ததாகவும், அந்த மலர்களால் செய்யும் அர்ச்சனையும், ஆராதனைக்கும் சக்தி அதிகம் என்று வேதங்களிலேயே குறிப்பிட்டுள்ளது.

அப்படி சிறந்த மலர்களின் ஒரு சிறிய அறிமுகத்தை பார்ப்போம்.

சாஸ்திர குறிப்பு:

பில்வ பத்ர ஸஹஸ்ரபாத் ஹி
வகுளம் புஷ்பம் உத்தமம்,
தஸ்மாத் வகுள புஷ்பாத் ஹி
நந்தியாவர்த்தம் விஷிஷ்யதே!
நந்தியாவர்த்த ஸஹஸ்ரபாத் ஹி
கரவீரம் விஷிஷ்யதே!
சர்வர் மநோரமை: புஷ்பை:
ஜாதிபுஷ்பம் விஷிஷ்யதே!

பொருள் விளக்கம்: வில்வ இலை மிக சிறந்த அர்ச்சனை பொருளாக பேசப்பட்டாலும், அந்த வில்வ இலைகளில் ஆயிரம் இலைகளை காட்டிலும் ஒரே ஒரு மகிழம்பூ சிறந்ததாக கருதப்படுகிறது.

இத்தகைய போற்றுதலுக்கு உரிய மகிழம்பூ, ஆயிரம் இருந்தாலும் ஒரு நந்தியாவட்டை இருந்



தால் அர்ச்சனை செய்ய அதைவிட சிறந்ததாக இருக்குமாம்.

நந்தியாவட்டை இத்தகு சிறப்புமிக்கதாகஇருந் தாலும், ஆயிரம் நந்தியாவட்டையை காட்டி லும் ஒரு அரளிப்பூ விசேஷமானதாக குறிப்பிடப் படுகிறது.

அரளிப் பூவுக்கு இருக்கும் இந்த மகத்துவத் தை விட, எல்லா பூக்களில் இருக்கும் சிறப்பம்சங் களை விட அர்சிக்க சிறந்த பூவாக 'ஜாதி பூ' இருப்பதாக இந்த குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

எல்லா தெய்வங்களையும் அர்சிக்க ஏற்ற பூ ஜாதிப் பூ! இதன் வாசம் தெய்வீக அம்சமாக கருதப்படுகிறது.

ஜாதி பூ வைத்தவுடன் சீக்கிரம் வாடி விடும் தன்மை கொண்டது ஆனால் அதுவரை அது தரக்கூடிய மணமானது நம்மை கடவுளின் பக்கம் ஈர்த்து கொடுக்கும் ஆற்றல் கொண்டது.

பூக்களில் சிறந்தப் பூக்களைப் பற்றி பார்க்கும் அதே வேளையில், அந்தப் பூக்கள் மொட்டாக இருக்கும் போது அதை இறைவனுக்கு படைக்க கூடாது என்றும் சாஸ்திரக் குறிப்புகளில் உள் ளன.

மொட்டாக எந்தப் பூக்களையும் அர்ச்சனை, ஆராதனைக்கு படைக்கக் கூடாது என்ற விதி இருந்தாலும், உலகில் இரண்டு மலர்களுக்கு மட்டும் இதிலிருந்து விதிவிலக்கும் உள்ளதாக சாஸ்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தாமரை மற்றும் செண்பகப் பூக்களைத்தவிர்த்து மற்ற அனைத்துப் பூக்களும் பூத்த நிலையிலேயே இறைவனுக்கு அர்ப்பணிக்க வேண்டும்.

தாமரை மற்றும் செண்பகப் பூவை மட்டுமே மொட்டாக இறைவனுக்குப் படைக்கலாம் என் றும் கூறப்பட்டுள்ளது.

## மலர்களால் ஏற்படும் தோஷம்

அதே போல நீங்கள் பூஜையில் அர்ச்சனை செய்யும் பொழுது பூக்களை எக்காரணம் கொண்டு துண்டுகளாக கிள்ளி போடக்கூடாது. அர்ச்சனைக்கு உகந்த பூவானது முழுமையாக இருக்க வேண்டும். எனவே முழுமையான பூக் களால் அர்ச்சனை செய்வது ரொம்பவே சிறந்த பலன்களை கொடுக்கும். அப்படி அல்லாமல் பூக்களை கசக்கியோ, வாடிய பூக்களையோ, காய்ந்து போன பூக்களையோ அல்லது கிள்ளியோ அர்சிக்க கூடாது.

அர்சித்த பூக்களை ஒருபொழுதும் நீங்கள் குப்பையில் வீசக்கூடாது. இதை யாருடைய கால்களிலும் படாத நீர் நிலைகளில் விட்டு விடலாம் அல்லது செடிகளுக்கு அடியில் போட்டுவிட்டு வரலாம். மலர்கின்ற எந்த பூவும் இறைவனின் திருப்பாதங்களை சேர்வதில்லை. அப்படி சேரக்கூடிய இந்த அர்ச்சனை பூக்கள் விலைமதிக்க முடியாதது எனவே இதை அவமதிப்பவர்களுக்கு தோஷங்கள் ஏற்படுமாம். அதனால் அர்ச்சிக்கும் பூக்களை கவனமுடன் கையாளுவது நல்லது.


ஆன்மிகமலர் .காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!
இணையதளத்தில் ஆன்மிக செய்திகளை படிக்க அருகே உள்ள ஸ்கேனரை கிளிக் செய்து
Scan to Read- aanmeegamalar Website
அற்புதமான ஆன்மிக செய்திகளை படித்து மகிழுங்கள்






# திருப்பதியில் ஒரு சபரிமலை

நாம் நினைத்தவுடன் எங்கும் நமக்கு காட்சி தரும் கலியுக கடவுளாக பக்தர்கள் கூட்டம் கூட்டமாக வரும் இடம் திருப்பதி ஆகும். இந்தியாவில் உள்ள அனைவரும் ஒருமுறை யாவது ஏழுமலையான் தரிசிக்க தினமும் லட் சம் பேர் தரிசிக்கும் வைகுண்டம் திருப்பதி திருமலையாகும். திருமலைக்கு செல்லும் முன் திருச்சானூர் அலமேலு மங்கைஎன அழைக் கப்படும் பத்மாவதி தயாரை பக்தர்கள் தரிசித்து செல்கின்றனர்.

திருப்பதியில் திருச்சானூர் செல்லும் வழியில் ஹரிஹர புத்திரன் தர்ம சாஸ்தா என்று அழைக்கப்படும் அருள் தரும் ஐய்யப்பன்கோவில் உள்ளது. இக்கோவில் சுமார் 32 ஆண்டு களுக்கு முன்பு கட்டப்பட்டு இப்போது திருப்பதிசபரிமலை என பக்தர்களால் அழைக்கப்படுகிறது.

எழில் மிகு தோற்றத்துடன் கலைநயத்துடன் பதினெட்டுபடிகளுடன் அமைக்கபட்டு உள்ளது.

சபரிமலையில் உள்ளது போல் தினமும் படிபூஜை நடைபெறுகிறது. விரதகாலங்களில் விஷேச மலர்கள் அலங்கரித்து பூஜை நடை பெறுகிறது. இங்கு ஐம்பொன் கவசத்தால் அமைக்க பட்ட கோவிலில் சபரிமலையில் எப்படி உள்ளதோ அதன் இங்கு மூலவர் ஐயப்பன் காட்சி தருகிறார்.

கன்னி மூலை கணபதி, நந்தியுடன் சந்திர மௌலிஸ்வரர் சன்னதி, காஞ்சி காமாட்சி அம்மன் சன்னதி, மஞ்சு மாதா, சரஸ்வதி அம்மன், ஆஞ்சநேயர், காலபைரவர், சனிபகவான், உற்சவமூர்த்திகளுடன் நடராஜர், மற்றும் தண்டபாணி ஸவாமி போன்ற தெய்வங்களை





தனி சன்னதி களில் பக்தர்கள் தரிசனம்செய்ய லாம். தற்போது திருப்பதி மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள ஏராளமான ஐயப்ப பக்தர் கள் விரதம் இருந்து இங்கு நடைபெறும் பஜனை மற்றும் படிபூஜை தரிசித்து சபரிமலை சென்று இங்கு வந்து மீண்டும் தரிசனம் செய்து விட்டு ஐயப்ப விரதத்தை முடிக்கின்றனர். இக்கோவில் அனைவரும் குடும்பத்தோடு வந்து தரிசனம் செய்யலாம்.

திருப்பதி ஏழுமலையான் தரிசிக்க செல் லும் பக்தர்கள் இனி திருச்சானூர்ரில் உள்ள ஐய்யபனையும் எழிமிகு ஆலயத் தையும் தரித்து வந்து ஐயப்பனின் அருளை பெறுங்கள்.

இக்கோவில் ஸ்தானிகர் தியா கராஜ ஸ்வாமிகள் கூறியதாவது:

"எனதுமுன்னோர்கள்ஐயப்பன் மீது தீராத பக்தி கொண்டனர்.இக் கோவிலில் வழிபாடு செய்யும் பக்தர்களுக்கு பல நன்மைகள் கிடைத்து உள்ளதாக இங்கு மாலை அணிந்து விரதமி ருந்து சபரிமலை சென்று தரிசனம்செய்துவந்த பக்தர்கள் அற்புதங்கள் பலவற்றை என்னிடம் தெரிவித்து உள்ளனர்.

ஆண்டு முழுவதும் இங்கு தரிசிக்கலாம் காலை ஆறு மணிமுதல் பதினோரு மணிவரையும், மாலை6மணிமுதல் எட்டுமணிவரை பக்தர்கள் தரிசனம் செய்யலாம். அனைவரும் குடும்பத்தினரோடு வந்து திருப்பதி ஐயப்பனை தரிசித்து வாழ்வில் மகிழ்ச்சியை பெறலாம்" எனதெரிவித்தார்.

இக்கோவில் பதினெட்டு படியை தரிசனம் செய்து விட்டு பக்தர்கள் அதன் அருகே அமைக்க பட்ட படி வழியில் மேலேறி சென்று சுவாமி ஐயப்பன் மற்றும் இங்கு தனிசன்னதிகளில் உள்ள பிற தெய்வங்களையும் தரித்து வரலாம்.

ஆண்கள் மட்டும்மின்றி பெண்கள், குழந்தைகள் என குடும்பத்தில் உள்ள அனைவரும் சபரிமலை யில் சுவாமி ஐயப்பனை தரிசித்த அற்புதத்தை இங்கு காணலாம்.



அழகுராஜா

திருப்பதி செல்லும் அனைவரும் மறக்காமல் திருச்சானூரில் உள்ள ஐயப்பன் கோவிலையும்தரிசித்து வாருங்கள்.

ஆலயம் திருப்பதி பஸ் நிலையத் தில் இருந்து திருச்சானூர் செல்லும் சாலையில் உள்ளது.

– முதன்மை செய்தியாளர்
அழகுராஜா 9994323622

# 2022 டிசம்பர் 12 ராசிகளுக்கான பலன்கள்






மதுரை
மடப்புரம் விலக்கு
ஜோதிடர்
கரு. கருப்பையா
M. A. M. PHIL
PH: 95247 51504
94431 65504.


## மேஷம்



எடுத்த காரியம் யாவினும் வெற்றி தரும் மாதம் இது இந்த மாதத்தில் துவங்கும் செயல்கள் யாவையும்வெற்றி பெறும், கடன் பிரச்சனையால் தவித்தவர்களுக்கு, நிம்மதி தரும் வகையில் கடன் சுமை குறையும், பொருளாதாரம் மேன்மையடையும், சண்டை சச்சவுரவுகள் நீங்கி குடும்ப உறவுகள் சீராகும்.

பரிகாரம்: முருகன் வழிபாடு மேற்கொள்வது நன்மை தரும்.


ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்


## ரிஷபம்



புதிய காரியங்களை துவங் குவதற்கு இந்தமாதம் சிறப்பான மாதமாகும், அனைத்து காரியங்களையும் சிறப்பாக செய்யலாம், வெளி வட்டார பழக்கங்கள் சிறப்பாக அமையும், பொருளாதாரம் கூடும் நீண்ட நாட்கள் இழுபறியாக இருந்த வழக்குகளில் சாதகமான தீர்ப்புகள் வரும்.

பரிகாரம்: ஐயப்பன் வழிபாடு மேற்கொள்வது நன்மை தரும்.

## மிதுனம்



நீண்டநாட்களா இருந்து வந்த கடன் சுமை குறையும், குடும்பம் மற்றும் வெளி நட்பு வழியில் பல காரியங்கள் நிறைவேறும், புதியதாக செய்யும் முயற்சிகள் அனைத்தும் சாதகமாகவே அமையும். ஆகும் இல்லற வாழ்க்கையில் அடியெடுத்துவைக்கும்முயற்சி கைகூடும்.

பரிகாரம்: துர்க்கை வழிபாடு மேற்கொள்வது நன்மை தரும்.

## கடகம்



புதிய முயற்சிகளில் ஈடுபட விரும்புபவர்கள் தாராளமாக முயற்சி செய்யலாம். தொடர்ந்து வெற்றி வாய்ப்புகள் வந்து கொண்டே இருக்கும். அரசியலில் இருப்பவர்களின் அரசியல் வாழ்க்கையில் யோ கம் உருவாகக்கூடும். நட்பு பலப்படும். குடும்ப உறவுகளில் பிரச்சனைகள் இருந்தால் சீராகும்.

பரிகாரம்: ஐயப்பன் வழிபாடு மேற்கொள்வது நன்மை தரும்.

## சிம்மம்



புதியதாக ஏதாவது செய்ய நினைப்பவர்கள், புதிய காரியங்களில் தாராளமாக ஈடுபடலாம். குடும்ப விஷ யங்களில் சற்று கவனம் தேவை, குடும்ப உறவுகளில் விரி சல் வராமல் பார்த்துக் கொள்ளவும். வழக்குகள் சாதகமாகும். சிறப்பான முன்னேற்றம் காணலாம். மாணவர் நலன் கூடும்.

பரிகாரம்: கணபதி வழிபாடு மேற்கொள்வது நன்மை தரும்.

## கன்னி



எடுத்த காரியம் சிறப்பான முன்னேற்றம் காணலாம். அரசியலில் வேகம் கூடும். மன அமைதி கூடும், ஆன்மீகப் பணிகளில் நாட்டம் கூடும். கோவில் திருப்பணி வேலைகளில் ஈடுபடுவதில் சிறப்பாக செய்யலாம். வெளியூர் பயணங்கள் காத்திருக்கிறது.

பரிகாரம்: காலபைரவர் வழிபாடு மேற்கொள்வது நன்மை தரும்.

## துலாம்



புதிய முயற்சிகள் துவங்கினால் வெற்றி வாய்ப்புகள் சாத்தியமாகும். வெளியூர் பயணங்கள் செல்லும் வாய்ப்புகள் அமையப் பெறுவீர்கள். நீண்டநாட்களாக மிகுந்தசுமையாக சுமந்து வந்த கடன் சுமை குறைய வாய்ப்பிருக்கிறது. புதிய வியாபார வாய்ப்புகள் அமையும் வாய்ப்புகள் காத்திருக்கின்றன.

பரிகாரம்: காக்கை வாகனன் வழிபாடு மேற்கொள்வது நன்மை தரும்.

## விருச்சிகம்



நட்பு கொள்வதில் கவனமாக செயல்படுவது அவசியம். ஆன்மீக உலா, யாத்திரை போன்றவற்றில் ஈடுபாடு கூடும். யாத்திரை சென்றுவரும் வாய்ப்பு அமையும். மற்றவர்கள் விஷயங்களில் சற்று கவனமாக செயல்படுவது நன்மை பயக்கும், யாருக்கும் ஜாமீன் ஏற்றுக்கொள்ள வேண்டாம். கால்நடை வளர்ப்பால் லாபம் கூடும்.

பரிகாரம்: மலை கோவில்களில் வழிபாடு மேற்கொள்வது நன்மை தரும்.

## தனுசு



புதிய தொழில் வாய்ப்புகளில் நன்மை காணலாம், அதே போன்று வியாபாரத்தில் ஈடுபடுபவர்களுக்கு வெற்றி வாய்ப்புகள் சிறப்பாக அமைய காத்திருக்கிறது. யாரிடமும் பேசும்போது கவனம் தேவை, முக்கியமாக பேச்சில் நிதானம் தேவை. குடும்ப உறவுகள் சீராகும். நட்பினால் பல காரியங்களை சாதிக்கலாம்.

பரிகாரம்: அனுமன் வழிபாடு மேற்கொள்வது நன்மை தரும்.

## மகரம்



அவசியம் உடல் நலத்தில் அதிகமான அக்கறை காட்ட வேண்டிய மாதம் இது. குழந்தைகளால் குடும்பத்தில் நல்ல முன்னேற்றம் காணலாம். புதிய வேலைவாய்ப்புகளுக்கு காத்திருப்பவர்களுக்கு சாதகமான வேலைவாய்ப்புகள் அமைய வாய்ப்புள்ளது. மறைமுக எதிர்ப்புகள் குறையும், ஆதரவு பெருக வாய்ப்பு உள்ளது.

பரிகாரம்: துர்க்கை வழிபாடு மேற்கொள்வது நன்மை தரும்.



## கும்பம்



வெளியூர் பயணங்களை குறைத்துக் கொள்வது நன்மை பயக்கும், அதே சமயம் உடல் நலத்தில் அதிக அக்கறையும் காட்ட வேண்டிய மாதம் இது. உணவு விஷயத்தில் அவசியம் கட்டுப்பாடு தேவை, உணவு விஷயத்தில் மேம்போக்காக இருப்பதை தவிர்க்கவேண்டும். ஒரு சிலருக்கு உடல் நல கோளாறுகள் ஏற்படலாம். திடீர் பணவரவு சாத்தியமாகும்.

பரிகாரம்: குலதெய்வ வழிபாடு மேற்கொள்வது நன்மை தரும்.

## மீனம்



எதற்கெடுத்தாலும் கோபப்படும் பழக்கத்தை விட்டு விடுவது நன்மை பயக்கும். கோபம், வேகம் இரண்டையும் கட்டுக்குள் வைத்திருப்பது அவசியம். பணி செய்யும் இடத்தில் புதிய பணி மாறுதல் கிடைக்கலாம். ஆன்மீக திருப்பணி வேலைகளை செய்யலாம். நட்பில் கவனம் தேவை.

பரிகாரம்: குருபகவான் வழிபாடு மேற்கொள்வது நன்மை தரும்.






# 108 சிவலிங்கங்களை பிரதிஷ்டை செய்து மாங்காடு பகுதியை காத்த ஸ்ரீ சர்ப சித்தர்

மாங்காடு அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோவிலிலிருந்து சுமார் இரண்டு கிலோ மீட்டர் தொலைவிலுள்ள கோவிந்தராஜ் நகரில் அமைந்துள்ளது, ஸ்ரீ சர்ப சித்தர் ஆதி ஜீவ பீடம்.

சுமார் 1200 வருடங்களுக்கு முன்பு மாங்காடு பகுதியில் மாபெரும் இயற்கை சீற்றம் ஏற்பட, அதனைக் காக்கும் பொருட்டு காளஹஸ்தி யிலிருந்து இங்கு வந்த ஸ்ரீ சர்ப சித்தர், மாங்காடு பகுதியில் 108 சிவலிங்கங்களை பிரதிஷ்டை செய்து தவம் செய்யத் துவங்கினார்.

தனது தவத்திற்கு எவ்விதத் தடங்கலும் உண்டாகிவிடக்கூடாது என்பதற்காக தன்னை பாம்பு புற்றினால் மூடிக்கொண்டவர், தனது சிரசின் மீது சர்ப லிங்கத்தை வைத்துக்கொண்டவாறே சமாதி நிலையை அடைந்தார்.

அவரது தவத்தின் காரணமாக மாங்காடு பகுதி முழுவதும் இயற்கை சீற்றத்திலிருந்து காப்பாற்றப்பட்டது. பிரளய காலத்திற்குப் பின் புதர் மண்டியிருந்த ஜீவ சமாதி பகுதிக்கு வந்த மக்கள், லிங்க வடிவிலான பெரிய கல்லைக் கண்டு அஞ்சி நடுங்கினர்.

அதனை பூதக்கல் என அழைக்கத் தொடங்கி, அந்தப் பக்கமாக செல்வதையும் தவிர்த்தனர். ஜீவ சமாதியான அந்தக் கல்லைச் சுற்றிலும் புற்றுகளும் பாம்புகளும் அரணாக இருந்து வந்தன.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் இப்பகுதியில் இடம் வாங்கிக் குடியேறிய திருவடி சித்தர் என அழைக்கப்படும் திரு. ரவிச்சந்திரன்





அவர்களின் கனவில் வந்த ஸ்ரீ சர்ப சித்தர் தனது இருப்பிடத்தை அவருக்கு அடையாளம் காட்டியிருக்கிறார்.

அதன் பின்னர், பல தடைகளைத் தாண்டி ஸ்ரீ சர்ப சித்தர் அவர்களின் ஜீவ சமாதியை பாது காக்கும் வகையில் 18 சித்தர்களின் உருவச் சிலை யுடன் கூடிய கோபுரத்தோடு திருக்கோவிலை நிர்மானித்திருக்கிறார் அவர்.

ஒவ்வொரு பௌர்ணமி நாளிலும் இடப்புறம் மற்றும் வலப்புறமாக இவரது லிங்கம் மாறி மாறி சாய்ந்துகொள்ளும் அபூர்வமும் இங்கு நிகழ்கிறது. ராகு, கேது தோஷம் உள்ள வர்களுக்கு சிறந்த அருள் புரியும் ஸ்ரீ சர்ப சித்தர் அவர்களிடத்தில் தியானம் செய்ய தனியே பாதாள தியான பீடமும் உள்ளது.



அவரை தீவிரமாக மனதில் நிறுத்தி தியானிப் பதன் மூலம் ஒளி வடிவமாகவோ அல்லது வேறு ஏதேனும் வகையிலோ அவரை உணர முடியும் என்பதை பக்தர்கள் உறுதியாகக் கூறுகின்றனர்.

ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமைகளிலும் ராகு காலத்தில் (4.30 – 6) பதினெட்டு எலுமிச்சை விளக்கு களை தொடர்ந்து பதினொரு வாரங்களுக்கு ஏற்றி வழிபடுவதன் மூலம், தோஷங்கள், பாவங்கள், சாபங்கள், நோய்கள், பில்லி சூனிய ஏவல்கள், போன்றவை முடிவுக்கு வருவதாக பக்தர்கள் நம்பிக்கைத் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான பூஜைகளுக்கும், ஏனையவற்றுக்கும் பணமோ நன்கொடைகளோ பெறுவதில்லை என்பது இந்த ஆலயத்தின் சிறப்பு.

சித்ரா பௌர்ணமியன்று திருவிளக்கு பூஜையும், மஹா சிவராத்திரியன்று ஆறு கால பூஜையும், அமாவாசை, பௌர்ணமி, பிரதோஷம், அஷ்டமி திதி ஆகிய நாட்களில் சிறப்பு ஆராதனைகளும் செய்யப்பட்டு வருகிறது. பௌர்ணமியன்று அன்ன தானமும் நடைபெறுகிறது.

ஸ்ரீ சர்ப சித்தர் ஆதி ஜீவ சமாதி மட்டுமின்றி சர்ப லிங்கேஸ்வரர், பைரவ சித்தர், பிரம்மா, சமயபுரத்தம்மன் ஆகியோருக்கும் சன்னிதிகள் உள்ளன.

அமைவிடம்: மாங்காட்டிலிருந்து பட்டூர் செல்லும் சாலையில் வலப்புறம் சென்றால் கோவிந்தராஜ் நகரை அடைந்து ஸ்ரீ சர்ப சித்தர் ஆதி ஜீவ பீடத்தை அடையலாம்.

தரிசனநேரம்: காலை 8.30–11, மாலை 5–8.30

– சந்துரு மாணிக்கவாசகம்
வாட்ஸ்அப்: 9789073346

# ஆன்மிகமலர்.காம் மாத காலண்டர்




அற்புதமான தகவல்களுடன்,

அற்புதமான 12 வண்ணப்படங்கள், வாரத்தின் முக்கிய நிகழ்வுகள்,
விடுமுறை தினங்கள், அனைத்து தகவல்களையும் கொண்ட பொக்கிஷம்

## டிசம்பர் 15 முதல் கடைகளில் கிடைக்கும்

மேலும் தகவல்களுக்கு:

Ph:9994323622 W.No:9444228203

# கணபதியை தமிழர் கடவுள் இல்லை என்பவர்கள் மன நோயாளிகளாக தான் இருக்க வேண்டும்

**கடவுள் உருவாக்கிய மதம்**



ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள பிள்ளையார்பட்டி விநாயகர் 7 ஆம் நூற்றாண்டுக்கு முன்பே அங்கே கோவில் கொண்டு இருப்பதாகபலமான வராலாற்று ஆதாரமும் இருக்கிறது. மேலும் கி.பி 4 ஆம் நூற்றாண்டை சேர்ந்த விநாயகர் சிலைகள் பல கண்டெடுக்கப்பட்டு உள்ளன.

இவைகளை வைத்து பார்க்கும் போது கணபதியானவர் பரஞ்சோதி முனிவரால் தமிழகத் திற்கு அழைத்து வரப்படுவதற்கு முன்பே அவர் இங்கே மக்கள் பலர் மனதில் சிம்மாசனம் போட்டு உறுதியாக அமர்ந்திருக்கிறார். அவர் தமிழகத்தில் புதிதாக முளைத்த அல்லது வலுகட்டாயமாக திணிக்கப்பட்ட தெய்வம் அல்ல என்பது சந்தேகத்திற்கே இடமில்லாத உண்மையாகும்.

இதுவரை நமது தொடரை தொடர்ச்சியாக படித்திவரும் வாசகர்களுக்கு ஒரு உண்மையை மீண்டும் சொல்ல விரும்புகிறேன். சனாதனமான நமது இந்துமதத்தில் சிவ வழிபாடு, விஷ்ணு வழிபாடு, சக்தி வழிபாடு, கணபதி வழிபாடு, முருகன் வழிபாடு, சூரியன் வழிபாடு ஆகிய ஆறு சமய பிரிவுகள் தொன்று தொட்டு நிலவி வந்தன இந்த பிரிவுகளுக்கு இடையில் நான் பெரியவன் நீ பெரியவன் என்ற தகராறுகள் உற்பத்தியாகி உச்சமாக நடக்கும் போது காலடியில் தோன்றிய மகா ஞானியான ஆதி சங்கர பகவத் பாதாள் தத்துவ

நோக்கில் ஆறு சமயங்களையும் ஒன்றாக இணைத்து மீண்டும் பழையபடி சனாதன தர்மத்தின் வெற்றி முரசை தேசமெங்கும் கொட்ட செய்தார். அன்று முதல் நமது இந்திய தேசத்தில் சமய பிணக்குகள் குறைந்து விட்டன என்றே சொல்ல வேண்டும் ஆனாலும் சிற்சில இடங்களில் அத்தகைய சண்டைகள் இல்லை என்று சொல்ல முடியாது.






எந்த சண்டை எப்படி இருந்தாலும் காணாபத்யம் என்று அழைக்கப்பட்ட கணபதி வழிபாடு தனி ஒரு மதமாக இன்று இல்லை என்றாலும் உலகத்தில் நடை முறையில் இருக்கின்ற இஸ்லாம் மதத்தை தவிர வேறு எல்லா மதங்களிலும் பல்வேறு வடிவங்களில் செழுமை யாக தொடர்ந்து வருகிறது.

உலக முழுவதும் பக்தி என்ற பரவசஉணர்வால் வணங்கப்படும் கணபதியை தமிழர்களுக்கு சொந்தமானவர் அல்ல என்று சொல்பவர்கள் நிச்சயம் மன நோயாளிகளாக தான் இருக்க வேண்டும்.

இந்து மதம் தவிர புத்த பகவானால் உருவாக்கப்பட்ட பௌத்த மதத்திலும் கணபதி வழிபாடு மிக சிறப்பாக இருக்கிறது. புத்த மதத்தை போலவே கடவுள் இல்லை என்று சொல்லும் ஜைன மதத்திலும் கணபதி வழிபாடு இன்றுவரை கொடிகட்டி பறக்கிறது. திபத் நாட்டில் கணபதியை வழிபடாதவர்கள் யாரும் இல்லை என்றே சொல்லலாம். பர்மா,ஜாவா நாடுகளிலும் இதே நிலைமைதான் இந்தொநோசியாவை கேட்கவே வேண்டாம் அந்த நாட்டின் ரூபாய் நோட்டில் கூட விநாயகர் படம் தான் பிராதானமாக இருக்கிறது. மலேசியா, சிங்கபூர் போன்ற பகுதிகளிலும் இலங்கையிலும் விநாயகர் வழிபாடு இருப்பது ஒன்றும் அதிசயம் இல்லை ஜப்பான் மற்றும் சீனாவில் இரட்டை பிள்ளையாரை காங்கிடென் என்ற பெயரில் அதிஷ்ட தெய்வமாக வழி படுகிறார்கள் ரஷ்யாவில் அஜர்பைஜான், ஆர்மீனியா போன்ற பகுதியில் கிறிஸ்தவ சகாப்தத்திற்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய விநாயக சிலைகள் கண்டு பிடிக்க பட்டுள்ளன.

இந்தியாவைபோலவே ஒரு காலத்தில்நாகரீகத் தில் சிறந்து விளங்கிய எகிப்து நாட்டிலும் விநாயகர் வழிபாடு இருந் திருக்கிறது. அங்கு கண்டுபிடிக்கப்பட்ட பல விநாயக சிற்பங்கள் வாடிக்கன் நகரில் உள்ள காட்சி கூடத்தில் பாதுகாக்க பட்டு வருவதாகவும் பல செய்திகள் கூறுகின்றன. தென் அமெரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்ட மிக பழமையான சிவாலயத்தில் பிள்ளையார் சிலைகள் இருக்கின்றன. ஈரான், ஈராக் போன்ற பகுதிகளில் நடைபெற்ற அகழ்வாராட்சியில் விநாயகர் உருவம் பொறிக்கப்பட்ட பட்டயங்கள் பல கிடைத்துள்ளன.

இவைகளை வைத்து பார்க்கும் போது கணபதி வழிபாடு இந்தியாவில் மட்டுமே இருந்தது இந்துக்கள் மட்டுமே வணங்கினார்கள் என்று சொல்ல முடியவில்லை. பிரணவ வடிவமான கணேசர் உலக மக்கள் அனைவராலும் போற்றி வணங்க பட்டார் என்று துணிவாக சொல்லலாம். இத்தகைய விநாயக பெருமானின் சிறப்புகளை அடுத்துவரும் அத்தியாயங்களில் சிறிது சிந்திப்போம்.



யோகி
ஸ்ரீ ராமானந்த குரு

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 09442426434

ஆன்மிகமலர்.காம்

### தீபாவளியைப் போன்று கொண்டாடப்பட்ட

# தீபத்திருவிழா

## சொர்க்கத்திற்கு வழிகாட்டும்

# சொக்கப்பானை

கார்த்திகை மாதத்தை தெய்வீகமாதமாகவே ஆதி தமிழர்கள் முதற்கொண்டு கொண்டாடி வந்துள்ளனர். இந்த கார்த்திகை மாதத்தில்தான் கார்த்திகை நட்சத்திரங்கள் வாயிலாக முருகப்பெருமான் தோன்றிய லீலையை சிவபெருமான் அரங்கேற்றியதாக கூறப்படுகிறது.

இதனால்தான் கார்த்திகைமாதத்தில் முருகனுக்குரிய கந்த சஷ்டி விழா தமிழகமெங்கும் சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

முருகனுக்கு எவ்வாறு உகந்த மாதமாக கார்த்திகை விளங்குகிறதோ, அதேப் போன்று சிவபெருமானுக்கும் கார்த்திகை மாதம் வெகு சிறப்பானதாக கொண்டாடப்படுகிறது.

சிவபெருமானுடைய முழு உருவத்தைக் காண்பதற்கும் பல தேவர்கள் முயன்றார்கள். அவர்களால் முடியாதபோது பிரம்மாவும் விஷ்ணுவும், ஹம்ச, வராஹ வடிவத்தில், ஆகாயத்திலும், பாதாளத்திலும், தேடினார்கள். அப்பொழுது அடி முடி காணாத ஜோதி



வடிவமாக இறைவன் காட்சியளித்தார். அதுதான் இன்றும் பஞ்சபூத ஷேத்திரங்களில் ஒன்றான அண்ணாமலையில் பரமேசுவரன் தீபவடிவாக பிரகாசிக்கிறார், அதுவே அண்ணாமலை தீபம் என வழங்கப்படுகிறது.

தீபம் தனியாக கொண்டாடினாலும், அன்றைய தினம் பரணி தீபம், சொக்கப்பானை எரிப்பது போன்ற நிகழ்வுகள் சிவன் கோவில்களில் நடைபெறும், இதற்கும் புராண விளக்கம் உள்ளது.

பரணி நட்சத்திரத்தில் மகா பரணி என்று போற்றக்கூடிய நந்நாளில், ஒரு எலி சிவன் கோயிலில் உள்ள தீபத்தைத் தூண்டியதால், தீபம் பிரகாசமாக ஒளிவிட்டது. இருள் மறைந்து, சிவபெருமான் பிரகாசமாக காட்சியளித்தார், இந்த புண்ணியம் அந்த எலிக்கு கைக்கூடியதால், மறு ஜென்மத்தில் அந்த எலி மிகப் பெரிய அரசனாக விளங்கியது என்று புராணங்களில் கூறப்படுகிறது.

இதனை மையப்படுத்திதான், ஒவ்வொரு கோவிலிலும் கார்த்திகை மாதம் பௌர்ணமி அல்லது மகாபரணி நட்சத்திரத்தன்று. நம்மி டையே உள்ள பழமைகள், பாவங்கள், கவலைகள் இவைகளெல்லாவற்றையும் பொசுக்கி, சொர்க்கத்திற்கு வழிகாட்டும் விழாவாக, சொக் கப்பானை நிகழ்வினை கோவிலில் நடத்து கின்றனர்.

## தீபாவளிப்போன்று கொண்டாடப்பட்ட தீபத்திருவிழா

கார்த்திகை தீபத்தை தமிழர்கள் எந்த பாகுபாடும் இல்லாமல் தொடர்ந்து மூன்று நாட்கள் வெகு விமரிசையாக கொண்டாடியுள்ளனர்.

கார்த்திகைத் தீபத் திருவிழா ஒரு நீண்ட வரலாற்றைக் கொண்டிருக்கிறது. இந்த திருவிழா எப்போது தொடங்கியது என்பதற்கான தெளிவான குறிப்புகள் இந்து சமய புனித நூல் களில்






கிடைக்கவில்லை என்றாலும், பழங்கால தமிழ் இலக்கியங்களில் ஒரு சில குறிப்புகள் காணப் படுகின்றன.

பழைய தமிழ் இலக்கியங்களில் ஒன்றான அகநானூறு, கார்த்திகைத் தீபத் திருவிழாவைத் தீபங்களின் திருவிழா என்று குறிப்பிடுகிறது. அகநானூறு சங்க காலத்தைத் சேர்ந்த இலக்கிய மாகும். அகநானூறு கி.மு. 200 முதல் கி.பி. 300 காலப் பகுதியில் நடைபெற்ற நிகழ்வுகளைப் பற்றியக் குறிப்புகளைத் தருகிறது.

சங்க காலத்தைச் சேர்ந்த மிக முக்கியமான புலவரான அவ்வையார் அவர்களும் தனது பாடல்களில் கார்த்திகைத் தீபத்தைப் பற்றி குறிப்பிட்டிருக்கின்றார். தீபாவளியைப்போன்று பல மடங்கு சிறப்பாக கார்த்திகை தீபத் திருவிழாவை கொண்டாடியதற்கு குறிப்புகள் பல்வேறு இதிகாசங்களில் உள்ளன.

கார்த்திகை பௌர்ணமி அன்று நடைபெறும் கார்த்திகைத் திருநாள் கண்கொள்ளாக் காட்சி

யாகும். மூன்று நாட்களுக்கு ஜாதி, இன வேறு பாடின்றி அனைவர் வீட்டு வாசலிலும் தண்ணீர் தெளித்து சுத்தப் படுத்தி, கோலமிட்டு, அகல் விளக்குகளை வரிசையாக ஏற்றி வைப்பர். கண்ணுக்கெட்டிய தூரம் வரை எங்கு பார்த்தாலும் ஒரே விளக்கொளிதான்!

கோவில்களிலும் இது போலவே ஆயிரக் கணக் கான விளக்குகள் ஒளிரும். இதற்காகவே அன்று இலுப்பை எண்ணை கொண்டு விளக்கு ஏற்றுவர்.

கார்த்திகை பற்றி சங்க இலக்கிய நூல்களில் இடம்பெற்ற குறிப்புகளைப் பலரும் அறிவர். ஆனால் தொல்காப்பியத்தில் இது பற்றிய குறிப்பு இருப்பது பலருக்கும் தெரியாது.

தொல்காப்பியத்தில்

**“வேலி நோக்கிய விளக்கு நிலையும்”**

– தொல்.பொருள். புறத்திணை இயல்35

இதன் பொருள் “கார்த்திகைத் திங்கள் கார்த்திகை நாளில் ஏற்றிய விளக்கு” என்று உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர் உரையில் கூறியுள்ளார்.

தொல் காப்பியத்தில் வரும் இந்திரன், வருணன், அக்னி, துர்கை முதலிய குறிப்பு களுடன் கார்த்திகை தீபத்தைப் பற்றியும் தொல் காப்பியத்தில் கூறப்பட்டுள்ளது.

அகநானூறு, நற்றிணை போன்ற அகத் துறை நூல்களில் கூட கார்த்திகை தீபத் திருவிழா பற்றிய குறிப்புகள் இருப்பது, கார்த்திகை தீபத்தை திருவிழாவாகவே தமிழர் கள் கொண்டாடியதற்கான ஆதாரமாகவே காட்டப்படுகிறது.

தீபாவளிக்கு இப்பொழுது எப்படி எல்லோரும் குடும்பத்தினரைப் பார்க்கப் போய் விடுகிறார்களோ, அது போல அந்தக் காலத்தில் கார்த்திகை திருவிழாவுக்கு எல்லோரும் சொந்த ஊருக்குப் போய்விடுவர். தொழில் விஷயமாக வெளியூர் சென்ற கணவன், கார்த்திகை விழாவுக்கு வரட்டும் என்று மனைவி சொல்லும் பாடல்...

**குறுமுயல் மறுநிறம் கிளர,**
**மதி நிறைந்து**
**அறுமீன் சேரும் அகல் இருநடுநாள்**
**அறுகு விளக்குறுத்து, மாலை தூக்கி...**

அகநானூற்றில் (141) இருக்கிறது

இதே போல அகநானூறு185, 11, நற்றிணை202 ஆகிய பாடல்களிலும் கார்த்திகை விழா சிறப்பிக்கப் படுகிறது.

கார்த்திகை தீபத் திருநாளில், திருக்கார்த்தி கையையொட்டி, விரதம் மேற்கொண்டு, சிவ புராணம், கந்தசஷ்டி கவசம் பாராயணம் செய்து வழிபடுவதும் மிகுந்த பலன்களைத் தரும் என்பதால் அக்காலத்தில் கார்த்திகை விரதத்தையும் மக்கள் கடைபிடித்துள்ளனர்.

திருக்கார்த்திகை நன்னாளில், முருகப் பெருமானை மனமுருகி வழிபட்டு பிரார்த்தனை செய்தால், கார்த்திகை நன்னாளில் கார்த்தி கேயன் அருளுவான். எதிரிகளை பலமிழக்கச் செய்வான். எதிர்ப்புகளையெல்லாம் விரட்டுவான்.


www.aanmeegamalar.com

வீடுமனை வாங்கும் யோகம் தந்தருள்வான் என கூறப்படுகிறது..

நட்சத்திரங்களில் போர் நட்சத்திரம் என்று கார்த்திகையைச் சொல்லுவார்கள். முருகப்பெருமானுக்கு இன்னொரு பெயர் கார்த்திகேயன். கார்த்திகைப் பெண்கள் வளர்த்ததால், முருகனுக்கு கார்த்திகேயன் என்றொரு பெயரும் அமைந்தது.

வேதத்திலும், குமார சம்பவம் முதலிய நூல்களிலும் கார்த்திகைப் பெண்களும், அவர்களைக் குறிக்கும் விண்மீன்களும் இடம் பெற்றிருகின்றன. ஆக வேத காலக் கார்த்திகை இன்று வரை வழிபடப் படுகிறது.

சிலர் சிந்து சமவெளி நாகரீகத்தில் காணப்படும் ஆறு கோடுகள் எல்லாம் முருகனை வளர்த்த ஆறு கார்த்திகைப் பெண்கள் என்றும் நம்புவர்.

கார்த்திகை பௌர்ணமி அன்று இந்த ஆறு நட்சத்திரங்களும் நிலவுடன் நெருங்கி நிற்கும். வானவியல் கணக்குப்படி கார்த்திகை நட்சத்திரங்கள் ஏழு ஆகும். நாமும் அதை முருகன்+ ஆறு கார்த்திகைப் பெண்கள் என்று சொன்னாலும் தவறில்லை.

முத்தொள்ளாயிரம் என்னும் நூலில்.

**குடத்து விளக்கேபோல்**
**கொம்பன்னார் காமம்**
**புறப்படா பூந்தார்**
**வழுதி - புறப்படின்**
**ஆபுகும் மாலை அணிமலையில்**
**தீயே போல்**
**நாடறி கௌவை தரும்**

என்று முத்தொள்ளாயிரம் நூலில் குறிப்பிட்டுள்ளது.

**“குன்றிற் கார்த்திகை**
**விளக்கீட்டென்ன”**

என்று சீவக சிந்தாமணி ஆசிரியர் திருத்தக்க தேவர் குறிப்பிட்டுள்ளார்.

பொய்கையார், கார் நாற்பதில்

**“கார்த்திகைச் சாற்றிற் கழி**
**விளக்கைப் போன்றனவே”**

என்றும் கார்த்திகை தீபத்தின் சிறப்பை கூறியுள்ளனர்.

தற்போது தமிழகத்தில் மட்டும் அல்லாமல் கேரளா, ஆந்திரா மற்றும் கர்நாடகா போன்ற மாநிலங்களிலும் கார்த்திகைத் தீபத் திருவிழா கொண்டாடப்படுகிறது.

கார்த்திகைத் தீபவிழா



தமிழர்களுக்கு ஒரு முக்கிய விழாவாகும். இந்த உலகத்தில் தமிழர்கள் எங்கெல்லாம் பரவியிருக்கிறார்களோ அங்கெல்லாம் இந்த பாரம்பரிய விழாவை மகிழ்ச்சியுடன் கொண்டாடி வருகின்றனர்.



கீதா-ராஜன்

தீபத்திருவிழாவிற்கு முதன்மையான ஸ்தலமாக, சிவபெருமான் அக்னிவடிவாக காட்சிதரும் திருவண்ணாமலை திகழ்கிறது.

அக்னிக்குஆதாரஸ் தலமாகவும்திருவண்ணாமலையே இருப்பதால், கார்த்திகை தீபத்தின்போது வீடுகளில் விளக்கேற்றுபவர்கள், திருவண்ணாமலையில் தீபம் ஏற்றிய பின்பே, வீடுகளில் விளக்கேற்ற வேண்டும்.

அக்னியில் இருந்து, அக்னியை பெற முடியும் என்ற கோட்பாட்டின்படி, திருவண்ணாமலை தீபத்திற்கு பின் வீடுகளில் தீபம் ஏற்றும்போது, அண்ணாலையார் நமது வீடுகளிலும் வாசம் செய்வார் என்பது ஐதீகம்.

– கீதாராஜன்

தொடர்பு எண்: 9444228203

# இறைவன் மீது வைக்கும் நம்பிக்கை மற்றும் விசுவாசம்

பரமஹம்ஸர் கூறுகிறார்: "உடனடியாக குணமடைவதற்கான மிகச் சிறந்த முறை இறைவனிடத்தில் முழுமையான, கேள்விகளற்ற விசுவாசம்கொள்வதாகும். அந்த விசுவாசத்தைத் தூண்டுவதற்கான ஓர் இடைவிடாத முயற்சியே மனிதனுடைய மகத்தான மற்றும் மிகச்சிறந்த பயன் தரும் கடமையாகும். இறைவனிடம் வைக்கும் நம்பிக்கையும் இறைவனிடம் காட்டும் விசுவாசமும் வெவ்வேறானவை. நீங்கள் நம்பிக்கையை சோதித்து அதன்படி வாழாமல் இருந்தால் அது பயனற்றது. நம்பிக்கை அனுபவமாக மாற்றப்படும்பொழுது அது விசுவாசமாகிறது. நீங்கள் நம்புவதற்கு விருப்பப்படலாம்; நீங்கள் நம்புவதாக நினைக்கக்கூட செய்யலாம்; ஆனால் நீங்கள் நிஜமாகவே நம்பினால் அதன் பலன் உடனடியானதாக இருக்கும்."

"விசுவாசம் முரண்பட முடியாதது; அது சத்தியத்தைப் பற்றிய உள்ளுணர்வுபூர்வமான திடநம்பிக்கை. மேலும் அதை முரண்பாடான சாட்சியினாலும்கூட அசைக்க முடியாது. இந்த மகத்தான சக்தி எவ்வாறு வியக்கத்தக்க முறையில் செயல்படுகிறது என்பதை நீங்கள் உணர்வதில்லை. இது கணித ரீதியாக இயங்குகிறது. "நிகழுமா" என்ற கேள்விக்கு இடமேயில்லை. விசுவாசம் என்பதற்கு, இதைத்தான் குறிப்பிடுவது; காணப்படாதவைகளின் நிரூபணமுமாயிருக்கிறது."

"எல்லையற்ற சக்தியைத் தருவதற்கு உங்களது எண்ணங்கள். பிரார்த்தனைகள் மற்றும் திடநம்பிக்கைகளுக்கு நேர் பின்னால் இறைவனது சக்தி உங்களுக்குள் வேலை செய்துகொண்டிருக்கிறது என எப்பொழுதும் சந்தேகத்திற்கிடமின்றி நம்புங்கள். உங்களுக்குள்




**144**
**பாகம்**
**பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்**
**மனித வாழ்வு மேம்படுவதற்காக**

ஒவ்வொன்றிலும் அவனது செயல்பாட்டை ஒப்புக்கொள்ளுங்கள். அதனால் எப்பொழுதும் உங்களுடன் அவனைப் பெற்றிருப்பீர்கள். இடைவிடாத பிராத்தனைகளினாலும் தொடர்ந்த நம்பிக்கையினாலும் அந்த மாபெரும் சக்தியை எழுப்பமுடியும். நீங்கள் சரியான முறையில் உணவு உட்கொண்டு உடலுக்குத் தேவையானதைச் செய்து கொண்டிருங்கள்; ஆனால் இடைவிடாது அவனிடம் பிரார்த்தனை செய்யுங்கள். "இறைவா, நீதான் என்னை குணப்படுத்தவேண்டும்; உன்னால்தான் என்னை குணப்படுத்த முடியும். ஏனெனில் வைத்தியர்கள் மருந்துகளினால், எட்டமுடியாத ஜீவ அணுக்களையும், உடலின் சூட்சுமமான நிலைகளையும் நீதான் கட்டுப்படுத்துகிறாய்."



குருப்ரியா

மகிழ்ச்சி நிறைந்த குரலில், லாஹிரி மகாசயர் கூறினார்: "அந்த சர்வ வல்லமையுள்ள பரமாத்மாவினால் மருத்துவர் இருந்தாலும் அல்லது இல்லாவிட்டாலும் எவரையும் குணப்படுத்த முடியும் என்பதை எப்பொழுதும் அறிந்துகொள்."

குருதேவர் மேலும் கூறுகிறார்: " இது இறைவனது உலகம். அவன் உங்களை இங்கிருந்து எடுத்துக்கொள்கிறான். அவனே உங்களை இங்கே வைத்திருக்கிறான். மருத்துவர், "நான் உங்களை குணப்படுத்துவேன்" என்று கூறும்பொழுது இறைவன் உங்களை எடுத்துக்கொள்ளத் தீர்மானித்தால், நீங்கள் சென்று விடுவீர்கள். எனவே உங்களது வாழ்க்கையை அவனுக்காக வாழுங்கள்."

"ஒரு நோயுற்ற மனிதன் தனது நோயைப்போக்கிக்கொள்வதற்கு மனப்பூர்வமாக முயற்சி செய்யவேண்டும். பின் மருத்துவர்களேகூட நம்பிக்கையில்லை என்று அறிவித்தாலும், அவன் மிகுந்த மன அமைதியுடன் இருக்க வேண்டும். ஏனெனில் பயமானது, சர்வசக்திபடைத்த கருணாமயமான இறை இருப்பின்மீதுள்ள விசுவாசத்தின் கண்களை மூடிவிடுகிறது. பரபரப்பான கவலையில் மூழ்குவதற்குப் பதிலாக சங்கல்பித்துக்கொள்ளவேண்டும். "நான் உனது அன்பான கவனிப்பு எனும் கோட்டையினுள் என்றும் பத்திரமாக இருக்கிறேன்." பயமற்ற பக்தன் குணப்படுத்த முடியாத நோய்க்கு ஆளாக்கி மாள நேரும்பொழுது இறைவன்மீது கவனத்தைச் செலுத்தி, உடல் சிறையிலிருந்து விடுதலை அடைந்து சூட்சும உலகத்தில் ஒளி பொருந்திய மறுமை வாழ்விற்குச் செல்லத் தயாராகிறான். இதன் மூலம் அவனது அடுத்த பிறவியில் மிக உயர்ந்த முக்தி என்னும் லட்சியத்திற்கு மிக அருகில் அவன் முன்னேறுகிறான். அனைத்து மனிதர்களும் ஒவ்வொரு வெளிப்புற பேரிடரையும், ஆன்ம உணர்வுநிலை வெல்ல முடியும் என்று உணர்ந்துகொள்வதை இலக்காகக்கொள்ளவேண்டும்."

"மேலும் அவர் கூறுகிறார்: " ஆன்மீக சக்தி படைத்தவர்களுக்கு மரணம்கூட ஒன்றுமேயில்லை. ஒருமுறை நான் இறந்துகொண்டிருப்பதாகக் கனவு கண்டேன். இருந்தபோதிலும் நான் அவனிடம் வேண்டிக்கொண்டிருந்தேன். "இறைவா, பரவாயில்லை, எதுவும் உன் திருவுள்ளமே." பிறகு அவன் என்னைத் தொட்டான். நான் உண்மையை உணர்ந்தேன். "நான் எப்படி இறக்க முடியும்? அலையால் இறக்க முடியாது; அது பெரும் கடலுள் மீண்டும் மூழ்கி மறுபடியும் முன்னால் வருகிறது. அலை எப்பொழுதும் இறப்பதில்லை; நானும் என்றும் இறக்க முடியாது" என்கிறார் குருதேவர்.

ஸ்ரீ ஞானமாதா என்பவர், பரமஹம்ஸ யோகானந்தரின் முதன்மை சீடர்களுள் ஒருவர். அவர் புனிதமான ஆத்மாக்களில் ஒருவராகத் திகழ்ந்தார். அவருடைய வாழ்வின் கடைசி இருபது வருடங்களில் அவர் தாங்கிக்கொண்டது மிகக் கடுமையான உடற்பிணியாக இருந்தபோதிலும், மனம் கலங்காத அவரது அமைதியான வீரம், அவரது அசையாத அகவலிமை மற்றும் இறை அன்பு ஆகியவற்றால் அவரை அறிந்த அனைவரும் மனவெழுச்சி பெற்றனர்.

குருதேவர் அவரைப்பற்றிக் கூறியதாவது " ஞானமாதாவின் வாழ்க்கையில் அவர் ஒரு மகத்தான அகத்தூண்டுகோலாகத் திகழ்ந்தார். அவர் துன்பப்பட்ட அத்தனை வருடங்களிலும் இறைவனுக்கான அவரது அன்பு மிக உயர்ந்தது என்பதைக் காட்டினார்; அவரது கண்களில் அந்தத் துன்பத்தின் ஒரு குறியைக்கூட நான் ஒருபோதும் கண்டதில்லை. அதனால்தான் அவர் ஒரு மகத்தான ஞானியாக ஸ்ரீ ஒரு மகாத்மாவாக ஸ்ரீ இருக்கிறார். அதனால்தான் அவர் இறைவனுடன் இருக்கிறார். சவப்பெட்டியில்

நான் அவருடைய உடலைக்கண்டபொழுது சிஸ்டர் –ன் ஆத்மா எங்கும் வியாபித்துள்ள விண்வெளியுடன் இரண்டறக்கலந்துவிட்டதை உணர்ந்தேன். எனக்குள்ளிருந்து தெய்வத்தந்தையின் குரல் என்னிடம் பேசியதைக் கேட்டேன்: “இருபது வருடத் துன்பம் அவருடைய அன்பை என்னிடமிருந்து ஒருபோதும் விலக்கியதில்லை. அதைத்தான் நான் அவருடைய வாழ்க்கையில் மகத்துவம் வாய்ந்ததாகக் கருதுகிறேன்.” இவ்வளவும் கேட்ட பிறகு என்னால் ஏதும் பேச முடியவில்லை என்றார் குருதேவர். தெய்வத்தந்தைக்கு நாம் அவர் மீது கொண்டுள்ள அன்பை இருபது வருடங்களுக்கோ அல்லது அதற்கும் மேலாகவோ ரூ நமது வேதனை மூலம் சோதிக்க உரிமை உள்ளது. இதனால் அதற்கு மாற்றாக அவரது பிரதிபிம்பமாக உள்ள நாம், நமது இழந்த சாசுவதத்தை என்றும் புதிய ஆனந்தத்தை உரிமை கோரலாம்.

இறைவனிடத்தில் விசுவாசத்தை வளர்த்துக்கொண்டால் அவனிடத்திலுள்ள நமது உண்மையான அன்பு அல்லது பாசம் நம்மை தியானம் செய்ய வைக்கிறது. தியானம் பிரார்த்தனை செய்ய வைக்கிறது. இவ்வாறு தியானத்தில் முன்னேறும்பொழுது பிரார்த்தனைகளுக்கு பதில் கிடைக்கிறது. அதற்கு ஓர் உதாரணத்தை குறிப்பிட விரும்புகிறேன்.

உதாரணம்: தற்போது நடைமுறையிலுள்ளதைத்தான் கூறுகிறேன். பல ஆண்டுகளாக, ஒரு பெண், குழந்தைப்பேறு இல்லாமலிருக்கிறன்றாள் என வைத்துக்கொள்வோம். அவள் என்ன செய்வாள் என்றால், மருத்துவரை அணுகுவாள். மருத்துவருடைய ஆலோசனையும் கருத்தரிப்பதற்கான சிகிச்சையும் அவளுக்கு குழந்தைப் பேற்றை அளிக்கிறது. அதனால் உலக வியாபாரங்களில் ஊடுருவுகின்ற குழந்தையாகப் பிறக்கிறது. மாறாக விசேஷமான தன்மையுடைய தெய்வீகக் குழந்தையை அல்லது இறை – அனுபூதி பெற்ற குழந்தையை, ஒரு மருத்துவரின் ஆலோசனையின் மூலமோ அல்லது சிகிச்சையின் மூலமோ நிச்சயமாகப் பெற முடியாது. ஆனால் பெற முடியும். தியானத்தால் முன்னேற்றமடைந்தவர்களின் பிரார்த்தனை மூலமாக மேலே கூறிய குழந்தையை நிச்சயம் பெற முடியும். அதனால் வீடும் நாடும் நலன் பெறும்; பயனடையும். தியானத்தால் முன்னேற்ற மடைந்தவர்களால் செய்யப்படும் பிரார்த்தனையால் மட்டும்தான் உன்னதமான குழந்தைகளை பெற்றெடுக்க முடிகிறது. இதுபோன்று பல உதாரணங்கள் நம் இந்தியாவில் நிகழ்ந்துள்ளன. எனவே தியானமும் பிரார்த்தனையும் மனித குலத்திற்கு மிக முக்கியமாகத் தேவைப்படுகிறது. எனவே இறைவனிடத்தில் முதலில், குருதேவர் கூறுவது போல் விசுவாசத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும்.



மீண்டும் மலரும்...

குருப்ரியா (வசுமதி கலியபெருமாள்)
சர்பதிவாளர் (ஓய்வு)
Cell No.9894595909


ஆன்மிகமலர்
மெயில் புக்
ஆன்மிகமலர்.காம் இணையதளத்தின் வாயிலாக வெளிவரும் ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தின்
140 இதழ்களையும்
இலவசமாக டவுன்லோடு செய்ய கீழே உள்ள ஸ்கேனரை கிளிக் செய்யவும்...
Scan to Read- aanmeegamalar E-magazine










# டெல்லியில் ஐயப்ப பூஜை நொய்டாவில் நாம சங்கீர்த்தனம்

### சாஸ்தாப்ரீதி

கிழக்கு டெல்லியில் உள்ள வசுந்தரா என் கிளேவில் உள்ள ஸ்ரீ சங்கடஹடஹர கணபதி கோயிலில் நவம்பர் 27 அன்று சாஸ்தாப்ரீதி நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்வின் போது பஜனைகள் நடைபெற்றது.

இதில், காலை நிகழ்ச்சியாக, உதக சாந்தி பாராயணத்துடன் தொடங்கியது, அதைத் தொடர்ந்து ஸ்ரீ ஐயப்பன் மற்றும் ஸ்ரீ சங்கடஹர கணபதிக்கு மஹான்யாச பூர்வக ஏகாதச ருத்ராபிஷேகம் நடைபெற்றது.

கோண்ட்லி ஸ்ரீ தர்மசாஸ்தா மண்டலி குழுவினர் பஜனைகளை வழங்கினர். அன்னபூரணேஸ்வரி பூஜை மற்றும் அன்னதானத்துடன் நிகழ்ச்சி நிறைவு பெற்றது. நிகழ்ச்சியில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர். இந்த கோவில் வசுந்தரா என்கிளேவ் சர்வேஸ்வர சமாஜ், ரெஜிடி., புது தில்லியால் நிர்வகிக்கப்படுகிறது.


எஸ்.வெங்கடேசன்

### நாம சாகர்

நொய்டா செக்டார் 42ல் உள்ள சங்கர மடத்தில், நாம சாகர் நிகழ்ச்சி சிறப்பாக நடை பெற்றது.

கலைமாமணி டாக்டர் ஒ.எஸ். அருண் அவர்கள் வயலினில், டெல்லி ஸ்ரீ ஆர் ஸ்ரீதர், கும்பகோணம் டாக்டர் என் பத்மநாபன் மிருதங்கம், மன்னை என் கண்ணன் கதம்பத்தில், உஜித் உதயகுமார் ஆகியோர் தப்லா இந்த நாம சங்கீர்த்தனத்தில் சிறப்பாக அமைந்தது.

நொய்டா இந்த இசை நிகழ்ச்சியில் திரளான பக்தர் கள் கலந்து கொண்டனர்.

– எஸ்.வெங்கடேசன், நொய்டா
தொடர்பு எண்: 9811161370




# மனித இடர்களை போக்கும் செம்பாம் பினன்குடி

சோழவள நாட்டில் எண்ணற்ற சிவாலயங்கள் சிறப்புக்குரியவை. அவற்றுள் செம்பங்குடியும் ஒன்றாக திகழ்கிறது.

அமிர்தம் வேண்டி தேவர்களும், அசுரர்களும் பாற்கடலை கடைந்தனர். அதில் கிடைத்த அமிர்தத்தை தேவர்களுக்கு பகிர்ந்து அளித்தார் மகாவிஷ்ணு. விப்ரசக்தி என்னும் அசுரனுக்கும், இரணியனின் தங்கை சிம்ஹிக்கும் பிறந்தவன் ஸ்பானு. அசுர குலத் தலைவன். தேவ வடிவம் பூண்டு அமிர்தத்தை உண்டான்.



இதனை குறிப்பால் உணர்ந்த சந்திர சூரியர் அவ்வசுரனின் தலையில் ஓங்கி அடிக்க.....அவனது தலை சிரபுரம் என்னும் சீர்காழியிலும், உடல் செம்பாம்பினன்குடி என்னும் இச்செம்பங்குடியிலும் விழுந்தது. சிவந்த மனித உடலும், பாம்பின் தலையும் கொண்ட கேதுவின் வடிவம் இங்கு குடிகொண்டதால் இத்தலம் செம்பாம் பினன்குடி ஆனது.

அமுதுண்ட அவை ஈசனை நோக்கி கடுந்தவம் இருந்து சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து, பூஜித்து, அகில உலகத்தையும் ஆட்டிப் படைக்கும் வரமும், சந்திர சூரியரை விழுங்கும் பலமும் கேட்டன. ஈசனோ சூரிய சந்திரர் இன்றி உலகம் தத்தளிக்கும். இருப்பினும், கிரகண காலங்களிலும், அமாவாசையிலும் அவர்களை விழுங்கும் திறன் பெற

அருள்பாலித்தார். இருவ ருக்கும் கிரக பதவியும் வழங்கினார். அவர்களே இராகு மற்றும் கேது ஆவர்.

எனவே ஆதி கேதுத் தலமாக போற் றப்படு கின்றது இந்த செம்பங்குடி. அருணாச்சல கவிராயரின் சீர்காழி தலபுராணத்தில் இப்பதி செம்பாம்பினன்குடி என்றும் கேதுபுரம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

திருநாவுக்கரசர் அருளிய ஆறாம் திருமுறை யில் மனித இடர்களை போக்கும் தலங்களுள் ஒன்றாக விளங்கும் இந்த தலத்தை வைப்புத் தலமாக போற்றியுள்ளார்.

ஊருக்கு சற்று ஒதுங்கிய இடத்தில் இச் சிவாலயம் அமையப்பெற்றுள்ளது. சுற்றிலும் வயல்வெளிகள். ரம்மியமான சூழல். தோரண வாயிலின் நேராக ஈசனது சன்னதி அமைந்துள்ளது. விதானத்தில் அம்மையப்பர் தரிசனம். மகா மண்டபம், அர்த்த மண்டபம் கடந்து, கருவறையில் கண்ணோக்க...அற்புத தரிசனம். அழகிய சிறிய திருமேனியராய், ஆனந்தமாய் வீற்றிருக்கின்றார் ஸ்ரீ நாகநாதசுவாமி. ஆதியில் கேது பூஜித்த லிங்கமாதலால் கேதீஸ்வரர் என்றும் அழைக்கப்படுகின்றார். இலங்கை தேசத்திலே மிகப் பெரிதாகப் போற்றப்படும் திருக்கேதீஸ்வரம் திருத்தலத்திற்கு நிகராக நம் தமிழகத்தில் இத்தலம் விளங்குகிறது. பல ஜென்ம நாக தோஷங்களையும் நொடிப்பொழுதில் நீக்கி, சுகத்தை தந்தருளுபவர் இத்தல பெருமான்.

ஆலய வலம் வருகையில் முறையான கோஷ்ட தெய்வங்களோடு, தனி சன்னதியில் வீற்றிருக்கும் கணபதி, கந்தன் மற்றும் கஜ லட்சுமியை வணங்குகின்றோம்.

சுவாமிக்கு வாம பாகத்தில் அம்மையின் சன்னதி கிழக்கு முகமாக அமைந்துள்ளது. அம்பிகையாக ஸ்ரீ கற்பூரவள்ளி சிறிய திருமேனி கொண்டு புன்னகை சிந்துகின்றாள். திரிபுரசுந்தரி என்றும் அழைக்கப்பெறுகின்றாள்.

ஆதி கேதுவின் சன்னதி ஆலய வாயு பாகத்தில் தனியாக அமைந்துள்ளது. சிறிய ஆலயம். சிறந்து விளங்குகிறது. நம் ஒரு கால பூஜை நடத்தப்படுகின்றது. ஆலய மெய்க்காவலர் உதவியுடன் எப்போது வேண்டுமானாலும் சுவாமி தரிசனம் செய்யலாம்.

சுவாமிக்கும் அம்பாளுக்கும் பசும்பால் அபிஷேகம் செய்து, சிவந்த அல்லி மலர்களால் அர்ச்சித்து, புளியோதரை நிவேதனம் செய்து பிரார்த்திக்க, முன் ஜென்மங்களில் ஏற்பட்ட நாக தோஷங்களில் இருந்து நிவர்த்தி பெறலாம். அதோடு, சிறந்த அறிவையும், பேராற்றலையும் பெற்றிடலாம்.

சிவ பக்தியில் சிறந்தும், மோக்ஷகாரகனாகவும் திகழும் இத்தல ஆதி கேதுவை எமகண்ட வேளையில் அபிஷேகித்து, பல வண்ணங்கள் கொண்ட ஆடையை அணிவித்து, சிவந்த நீர் வகை புஷ்பங்களால் அர்ச்சித்து, கொள் ளுப்பொடி சாதம் நிவேதனம் செய்து, ஆராதித்து சகல பாவங்களிலிருந்தும் விடுபட்டு, சுக போகங்களோடு, சகல சௌபாக்கியங்களையும் பெற்றிடலாம். மயிலாடுதுறை மாவட்டம், சீர் காழி நகரிலிருந்து திருமுல்லைவாயில் செல்லும் பாதையில் மூன்று கிலோ மட்டர் தொலைவில் அமைந்துள்ளது செம்பங்குடி.

பழங்காமூர் மோ.கணேஷ்.
தொடர்பு எண்: 9789156179



# கோடி ஆண்டுகளாக தீபத்தை தரிசிக்கும் சித்தர்

திருவண்ணாமலை மலையில் ஏராளமான சித்தர்கள் இருந்தார்கள். இப்போதும் கூட அங்கு பல சித்தர்கள் இருக்கிறார்கள். ஆனால் நம் கண்களுக்குத்தான் தெரிவதில்லை. பதினெட்டு சித்தர்களில் ஒருவரான இடைக்காடர் திருவண்ணாமலையில் ஜீவசமாதி அடைந்துள்ளார்.

திருவிடை மருதூர், இடைக்காட்டூர் உள்பட பல இடங்களில் இடைக்காடர் ஜீவ சமாதி உள்ள போதிலும் திருவண்ணாமலையில் தான் அவரது பரிபூரண அருள் உள்ளது. திருவண்ணாமலை கார்த்திகை தீபத்தை இவர் கோடி ஆண்டுகளுக்கு கண்டு தரிசனம் செய்துள்ளார். திருவண்ணாமலை தலத்தில் கார்த்திகை தீபம் ஏற்றப்படும் போது அதை நேரில் கண்டு தரிசனம் செய்தாலே அளவற்ற புண்ணியம் கிடைக்கும் என்பார்கள்.

கோடி தடவைக்கு மேல் கார்த்திகை தீபத்தை தரிசனம் செய்த, இடைக்காடர் பற்றி நினைத்தால், திருவண்ணாமலை ஈசனின் மகிமையைத் தெரிந்தவர் இவர் ஒருவர் தான் என்பதை நாம் புரிந்து கொள்ளலாம். இவர் திருவண்ணாமலை பற்றிய ரகசியங்களை முழுமையாக அறிந்தவர் என்று கூறப்படுகிறது. இன்றும் பவுர்ணமி தோறும் திருவண்ணாமலையில் இடைக்காடர் கிரிவலம் வருவதாக கூறப்படுகிறது.

இடைக்காடர் மட்டுமல்ல, மேலும் பல சித்தர்களும் திருவண்ணாமலையில் கிரிவலம் வந்து கொண்டு தான் இருக்கிறார்கள். கலசப் பாக்கம் அருகில் உள்ள பூண்டியில், பூண்டி சித்தரின் ஜீவசமாதி இருக்கிறது. அந்த சித்தர் பவுர்ணமி தோறும் திருவண்ணா மலையில் கிரிவலம் வருவதாக சொல்லப்படுகிறது.

வாத்தியார் அய்யா ஸ்ரீமுத்து வடுகநாதர் சித்தர் என்று ஒரு சித்தர் உள்ளார். இவரது ஜீவசமாதி எங்கு இருக்கிறது என்று இதுவரை யாருக்குமே தெரியவில்லை. திருவண்ணாமலை கிரிவலப் பாதையில் உள்ள ஸ்ரீவராகி தீர்த்தத்துக்கு தினமும் இவர் வந்து வழிபட்டு செல்வதாக கூறப்படுகிறது.

சீரியா சிவம் பாக்கினி சித்தர் என்று ஒரு சித்தர் திருவண்ணாமலையில் வசித்தார். இவர் பெயரில் மலை ஒன்று அங்குள்ளது. அங்கு இந்த சித்தரின் அருள் இன்னமும் பரவி உள்ள தாக கூறப்படுகிறது.

அதுபோல ஸ்ரீபெத்த நாராயண சித்தர் என்பவரும் பல நூற்றாண்டுகளாக திருவண்ணா மலையில் வாழ்கிறார். யார் கண்களுக்கும் அவர் தன்னைக் காட்டியது இல்லை.

மேலும் வயிறு சார்ந்த நோய்கள் தீரும். திருவல்லத்தில் பிறந்தவர் பாம்பணையான் சித்தர், இவர் மற்ற சித்தர்கள் போல அருபமாக கிரிவலம் வருவதில்லை. இவர் மனித வடிவம் எடுத்து கிரிவலம் வருகிறார். மார்கழி மாத பவுர்ணமியில் இவர் கிரிவலம் வருவதாக சொல்கிறார்கள். இவரது பார்வை நம் மீது பட்டாலே போதும் விஷக் கடிகளால் உண்டாகும் தோஷங்கள் நீங்கும்.

ரோகிணி, திருவாதிரை, பூசம், உத்திரம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம், உத்திரட்டாதி ஆகிய நட்சத்திர நாட்களில் கிரிவலம் வருபவர்களுக்கு கணதங்கணான் சித்தர் அருளால் சகல நோய்களும் தீரும். மாத சிவராத்திரி கிரிவலத்தின் போது அர்த்தஜாம பூஜை நேரத்தில் குரு ஓரையில் இவரை பார்க்கும் தரிசனம் கிடைத்தால் நமது ஆத்மா தூய்மை அடையும்.

இவர்களைப் போல கணக்கற்ற சித்தர் பெருமக்கள் திருவண்ணாமலையில் தினம், தினம் கிரிவலம் வந்து கொண்டு தான் இருக்கிறார்கள்.

கிரிவலம் செல்லும் போது, இந்த சித்தர் பெருமக்களை நினைத்துக் கொண்டு நடந்தால், நிச்சயம் நல்லதே நடைபெறும்.

இதுபோன்று சித்தர்களும் முனிவர்களும் நிறைந்த இந்த சக்தி வாய்ந்த மலையை சுற்றும்போது, மிகவும் பய பக்தியுடன் செல்வது உகந்தது.

வீணான அரட்டை, தெய்வ சிந்தனை யில்லாமல் செல்வது போன்றவற்றால் அருபமாக இருக்கும் சித்தர்களின் சாபமும் ஏற்படும் என்ப தால்தால் மலையை சுற்றும்போது பேசாமல் சிவ மந்திரத்தையும், சிவ நாமத் தையும் ஜெபித்துக் கொண்டு செல்ல வலியுறுத்தப்படுகிறது.

எங்கள்
சேவைக்கு
உங்களின்
உதவி தேவை



# விருப்ப சந்தா



தொடர்ந்து வெளிவரும் நமது இதழுக்கு உதவி செய்ய விருப்பமுள்ளவர்கள் ரூ.10 முதல் தங்கள் வசதிக்கேற்ப விருப்ப சந்தா செலுத்தி எங்கள் பணிக்கு உதவலாம்.

**சந்தா அனுப்புபவர்கள், கீழ்காணும் ஸ்கேனர் மற்றும் வங்கி எண் வாயிலாக சந்தா செலுத்தலாம்**

बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda

BHIM Baroda Pay
SCAN TO PAY
WITH ANY BHIM UPI APP
Merchant Name : AANMEEGA MALAR TRUST

UPI
Paytm BHIM BharatPe

**AANMEEGA MALAR TRUST**
ACCOUNT NO. 49510100003648
IFSC CODE: BARB0KODAMB
(FIFTH CHARACTER IS ZORO)
BANK OF BARODA (KODAMBAKKAM BRANCH)

# சிந்தனையாளர்கள் முந்தி நின்று சிந்திக்கிறார்கள்

உலகிலுள்ள எல்லா பேராசிரியர்களுடன் சமய குருமார்களும் சமமானவர்களே என்பதை நீ சமமாக எண்ண வேண்டும். அவர்களே கல்வி என்ற மிகப்பெரிய வெட்டவெளியில் ஒளிருகின்ற சந்திர சூரியர்கள் ஆகும். ஒளி உள்ள சந்திர சூரியர்களை கவனிக்காமல் இருக்க முடியுமா? மதிக்க வேண்டியவைகளே அவைகள்.

❖ ❖ ❖

'ஒரு பயனுள்ள மனிதன்'. இந்த சொற்றொடருக்கு அர்த்தமே இல்லை. மனிதனே பயனுள்ளவன் தான். 'ஒரு பயனுள்ள பெண்' இச்சொற்றொடருக்கு அதிகப்பொருள் இருக்கிறது. ஏனென்றால் உயிரின் பரிணாம வளர்ச்சி பெண்ணின் வழியாகவே நிகழுகிறது.

❖ ❖ ❖

எப்பொழுதும் பெண் குழந்தையைக் கொன்றுவிடாதீர்கள். அது பாவம் மட்டும் அல்ல. மனிதகுலத்தின் பெரிய இடிபாடும் கூட. இதை உணருங்கள்.

❖ ❖ ❖

இந்தியாவில் மேற்சொன்ன உபதேசம் ஆண்களின் சமுதாயத்திலும் பெண்களின் சமுதாயத்திலும் இது பலவீனமாகவே இருக்கிறது. இந்தச் சிறிய கருத்து சிந்தனை செய்கின்ற ஒவ்வொரு மனிதனாலும் சரியாக நிறைவேற்றப்பட வேண்டும்.

❖ ❖ ❖

சமுதாயக் குற்றங்கள் நமது நாட்டில் மிக அதிகமாக இருக்கின்றன. அது முதலில் களைந்தெடுக்கப்பட வேண்டும். பிறகு வரதட்சிணை முறை ஜாதீய அடிப்படையில் பரம்பரையைப் பேசுதல், சமுதாயத்தால் நிகழ்த்தப்படுகின்ற ஆடம்பரத் திருமணங்கள். மேலும், சிறிதும் கருணையே இல்லாத பண கை மாற்றங்கள் எல்லாக் கோணங்களிலும் இருந்து எடுத்து ஏறியப்பட வேண்டும். இத்தகைய இந்துக்களின் சமுதாயமுறை சமுதாயத்தின் மத்தியிலே ஒரு பெரிய பயத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

❖ ❖ ❖

அனைவருக்கும் திருப்தி தரக்கூடிய திருமணமுறை எது என்ற முடிவெடு. இந்த முடிவு ஒரு மணப்பெண்ணுக்கும் ஒரு ஆண் பிள்ளைக்கும் பொருந்தும். அவர்கள்தான் அதை செய்ய வேண்டும். அல்லாமல் வேறு வகையான பிரச்சாரத்தினாலும் சட்டத் திருத்தங்களாலும் இவைகளைக் கொண்டு வந்தால் இது சமுதா யத்தில் பெரிய தோல்வியைத் தழுவும்.

❖ ❖ ❖

வெற்றி அடைந்த திருமணங்கள் சர்வ வல்லமை படைத்த ஆண்டவனால் சேர்த்து வைக்கப்படுபவைகளே. மனிதனால் முடிவெடுக்கப்படுகின்ற திருமணங்களில் எப்பொழுதும் இரண்டு முடிவுகள் இருந்துக் கொண்டே இருக்கும். அதனால் தான் எதைப் பற்றியும் சொல்லாமல் மௌனமாய் கிடக்கின்றேன்.

❖ ❖ ❖



ஆதிமுதற்கொண்டு இந்தியாவை அரசர்களின் நாடு என்று குறிப்பிடுகிறார்கள். இதனால் நமது மக்களின் எண்ணங்கள் பிறநாட்டு மக்களின் எண்ணத்தைக் காட்டிலும் வேறுபட்டு நிற்கின்றது.

ஆகவே, இங்கு உள்ள எத்தகைய சிந்தனை இடிபாடும் நம்முடையது அல்ல. எல்லாம் நமது முறையைப் பொறுத்ததே.

❖ ❖ ❖

மேலைநாட்டுக் கல்வி மேலை உலகத்திலிருந்து நமக்கு ஓரளவு உதவி செய்து இந்தியர்களின் கண்ணை சிறிது அளவே திறந்திருக்கின்றது. இனியும் நாம் முழுமையான நன்மைகளை அவர்களி டத்திலிருந்து பெற்று உயர்ந்த கல்விக்கு போக இருக்கின்றோம்.

❖ ❖ ❖

நமது நாட்டு சமயக் கல்வியில் ஆதிமுதற்கொண்டே எப்படித் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்பதைப் பற்றிய சிந்தனையும் எவ்வித தனி உபதேசங்களும் இல்லவே இல்லை. இது ஏன் என்று எளியவனுக்குப் புரியவில்லை.

❖ ❖ ❖

நான் ஒரு சிந்தனை செய்கின்ற மனிதன். தற்பொழுது இருக்கின்ற எவ்வித சிந்தனைக்கும் நான் ஒரு உடன்பாடும் அல்ல. ஒரு தலைப்பட்ச கட்சிக்காரனும் அல்ல. இதுதான் என் உலகம். சிந்தனையாளர்கள் எப்பொழுதுமே காலத்தால் மிகவும் முந்தி நின்றுகொண்டு சிந்திக்கிறார்கள்.

ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்! .காம்

❖ ❖ ❖

முதல் வேகமான இளமைக்காலம் மிகவும் அழகு வாய்ந்தது. அது கோடை வாசஸ்தல மலை உச்சிப் பகுதிகளில் பெய்கின்ற மழைக்கும் குற்றாலத்துத் தூறல்களுக்கும் சமமானது. இது முதற்கட்ட காலம். மத்திய தர இரண்டாவது கட்டகாலம் சரியான இளமை முறுக்கின் வேகம். இதிலே யோசிக்கின்ற சற்றே பழுத்த தன்மை நமக்கு கிடைக்கும். ஆயினும் முதுமைக்கால நிலைகளும் இளமைக்கால முழுமைகளும் ஒவ்வொரு மனிதனின் மூளைக்கும் வேண்டும். இது பார்வைக்கு எப்படிப்பட்டது தெரியுமா? விதை இல்லா அழகான சிவந்த மேல்நாட்டு திராக்ஷை குளிர்ந்த சாப்பாடு என்ற ஐஸ்கிரீமின் மத்தியப் பகுதியிலே உள்ளதைப் போன்றதே.

❖ ❖ ❖

ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028



ஆசிரியர், வெளியீட்டாளர்
N.P.சந்திரன்
C.V. நடராஜன்
செல்: 9444228203
•••
முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994162182
•••
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா செல்: 9894595909
வேல் செல்: 9003199676
•••
வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.

ஆசிரியர் குழுவில் இணையலாம்

ஆன்மிகமலர்.காம் இதழில் இணைந்து செயல்பட விரும்புகிறீர்களா?... ஆன்மிகம் சம்பந்தப்பட்ட செய்திகளை எழுத ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்.

தொடர்பு கொள்ளவும்
9444228203

ஆன்மிகமலர்
மெயில் புக்



# இதுவரை வெளிவந்த அனைத்து இதழ்களையும் எந்தவித கட்டணமின்றி முற்றிலும் இலவசமாக படிக்க










## aanmeegamalar.com

## இணையதளத்தை பார்க்கவும்









# சிவபெருமான் மட்டுமல்ல முருகனும் காட்சிதந்த திருவண்ணாமலை

பஞ்ச பூத தலங்களில் திருவண்ணாமலை அக்னி தலமாக விளங்குகிறது. மேலும் கார்த்திகை தீபத்திற்கு மிக முக்கியத்துவம் வாய்ந்த தலமாகவும் திருவண்ணாமலை விளங்குகிறது. படைக்கும் பிரம்மாவும், காக்கும் விஷ்ணுவும் யார் உயர்ந்தவர் என்று சண்டையிட்டுக் கொண்டனர். இந்த சண்டையை முடிவுக்கு கொண்டுவர சிவபெருமான் இருவரையும் அழைத்து தனது அடியையோ அல்லது முடியையோ காண்பவரே சிறந்தவர் எனக் கூறி ஜோதியாக மாறி ஓங்கி உயர்ந்து நின்றார். விஷ்ணு வராக அவதாரம் எடுத்து பூமியைக் குடைந்து அடியைக் காண முயற்சி செய்தார். பிரம்மா அன்னப் பறவையாக மாறி முடியைக் காண பறந்தார். இருவராலும் அடியையும் முடியையும் காணஇயலவில்லை.

பிரம்மா ஒரு தாழம்பூவை அழைத்து தான் முடியைக்கண்டுவிட்டதாக பொய் சாட்சி கூறச் சொன்னார். அதுவும் அப்படியே செய்தது. இதனால் கோபமடைந்த சிவபெருமான் பிரம் மாவுக்கென்று இந்த உலகத்தில் தனியே கோவில் வைக்கக்கூடாது என்றும், தாழம்பூவை பூஜைக்கு பயன்படுத்தக்கூடாது என்றும் சபித்தார்.

சிவபெருமான் பிரம்மாவுக்கும், விஷ்ணு வுக்கும் ஜோதியாக காட்சியளித்த இடமே திருவண்ணாமலை ஆகும். இங்கு காணப்படும் மலையான அண்ணாமலை க்ருதாயுகத்தில் நெருப்பாகவும். த்ரேதாயுகத்தில் மாணிக்கமாகவும், த்வப்ரயுகத்தில் தங்கமாக இருந்ததாகவும் சொல்லப்படுவதுண்டு. தற்போது கலியுகத்தில் கல்லாக உள்ளது. பிரம்மாவிற்கும்,



விஷ்ணுவுக்கும் சிவலிங்கமாக காட்சியளித்த இடத்தில்தான் தற்போது அருணாச்சலேஸ்வரர் கோவில் உள்ளது.

அண்ணா என்றால் 'நெருங்கவே முடியாது' என்று அர்த்தம். பிரம்மனாலும் விஷ்ணுவாலும் அடியையும் முடியையும் நெருங்கமுடியாத நெருப்பு மலை என்பதால் அண்ணாமலை என்ற பெயர் வந்தது. www.aanmeegamalar.com

ஒருமுறை பார்வதி திருக்கைலாயத்தில் சிவனின் கண்களை விளையாட்டாக மூடியதால் உலகம் இருளில் மூழ்கியது. இந்த தவற்றிற்காக காஞ்சிபுரத்தில் மண்ணால் லிங்கம் செய்து வழிபட்டார் பார்வதி. அச்சமயத்தில் சிவபெருமான் தோன்றி அவரை திருவண்ணாமலைக்குச் சென்று வழிபடும்படி பணித்தார்.

அங்குபவளக் குன்றில் கௌதம முனிவரின் உதவியோடு பார்வதி மேற்கொண்ட தவத்தை மஹிசாசுரன் என்னும் அரக்கன் தடுத்தான். இதனால் கோபமுற்ற பார்வதி துர்கை வடிவம் கொண்டு அவனைஅழித்தாள். பின்னர் சிவ பெருமான ஜோதி வடிவில் பார்வதிக்கு காட்சி தந்து பார்வதிக்கு தன் உடம்பின் இடப்பக்கத்தை தந்து அர்த்தநாரியாக மாறினார் என்றும் கூறப்படுவதுண்டு.

மொத்தம் 24 ஏக்கர் பரப்பளவில் அமைந் துள்ள இந்தக் கோவில் கிட்டத்தட்ட 2000 ஆண்டுகளுக்கு முன்னரே இருந்திருக்கலாம் என்று வரலாற்றுச் சான்றுகள் கூறுகின்றன.

இக்கோவிலில் உள்ள ஆயிரம்கால் மண்டபத்தையும், சிவகங்கை குளத்தையும் கிருஷ்ணதேவராயரும், கிளி கோபுரத்தை கி.பி 1053ஆம் ஆண்டு ராஜேந்திர சோழ னும், பிரம்ம தீர்த்தத்தை கி.பி 1230ஆம் ஆண்டு வேணு தாயனும், வள்ளால கோபுரத்தை கி.பி 1320ஆம் ஆண்டு வள்ளால மஹாராஜாவும் கட்டியுள்ளனர்.

மேலும் இக்கோவில் உருவாக குலோத்துங்கன், ராஜேந்திரசோழன்,கோப்பெருஞ்சிங்கன், ஆதித்ய சோழன், மங்கையர்க்கரசி, விக்கிரமபாண்டியன், அம்மானை அம்மாள் ஆகியோரும் காரணமாக இருந்துள்ளனர். சேர, சோழ, பாண்டியர்களால் உருவாக்கப்பட்ட பெருமைக்குரியது இந்த திரு வண்ணாமலை. www.aanmeegamalar.com

பின்னர் 19 மற்றும் இருபதாம் நூற்றாண்டு களில் இக் கோவில் புதுப்பிக்கப்பட்டு 1903, 1944, 1976, 2002 ஆகிய ஆண்டுகளில் கும்பாபி ஷேகமும் நடைபெற்றது.

பெரிய மலைக்கு நடுவே மொத்தம் ஆறு பிரகாரங்களும், ஒன்பது கோபுரங்களுடனும் பிரமாண்டமாய் காட்சியளிக்கிறது இந்தக்கோவில்.

ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்
இணையதளத்திற்கும், ஆன்மிகமலர் மெயில் புத்தகத்திற்கும்
விருப்ப சந்தா
செலுத்தி, நமது இதழின் வளர்ச்சிக்கு ஊக்கமளியுங்கள்
Scan to Pay with any BHIM UPI App



கோவிலின் உள்ளே நுழைவதற்கு நான்கு கோபுரங்களும், கோவிலின் உள்ளே ஐந்து கோபுரங்களும் உள்ளன. கோவிலின் பிரதான கோபுரமான கிழக்கு கோபுரம் 217 அடி உயரமும் 11 அடுக்குகளையும் கொண்டது.

www.aanmeegamalar.com

கிரிவலம்: இங்கு உள்ள 2668 அடி உயர மலை லிங்கம் போல் காட்சிதருகிறது. மலை யின் கீழ்த்திசையில் இருந்து பார்த்தால் ஒன்றாகவும், சுற்றும் வழியில் இரண்டாகவும், மேற்கு திசையில் மூன்றாகவும்,முடிவில் ஐந்து முகங்களாகவும் காட்சி தருகிறது இந்த மலை.

இப்படி சிறப்பு வாய்ந்த இம் மலை பௌர்ணமி நாட்களில் நிலவின் ஒளி மலையில் இருக்கும் மூலிகைச் செடிகள்மீது பட்டு பிரதிபலிக்கும். அப்படி பிரதிபலிக்கும் ஒளிக் கதிர்கள் நம் உடலுக்கும் உள்ளத்திற்கும் நன்மை பயக்கும். எனவே பௌர்ணமி நாளில் கிரிவலம் வருவது சிறப்பு.

14 கி.மீ நீளமுடைய கிரிவலப் பாதையில் இந்திர லிங்கம், அக்னி லிங்கம், யம லிங்கம், நிருத்தி லிங்கம், வருண லிங்கம், வாயுலிங்கம், குபேர லிங்கம், ஈசான்ய லிங்கம் ஆகிய எட்டு லிங்கங்கள்எட்டுத் திசைகளிலும் உள்ளன. மாணிக்கவாசகரை சிறப்பிக்கும் வகையில் கிரிவலப் பாதையில் அடி அண்ணாமலையில் ஒரு கோவிலையும் காணலாம்.

சிறப்புகள்: காசியில் இறந்தால் முக்தி, திருவாரூரில் பிறந்தால் முக்தி, சிதம்பரத்தில் வழிபட்டால் முக்தி ஆனால் திருவண்ணாமலை நினைத்தாலே முக்தி தரும் தலம் என்று கூறப்படுகிறது.

அருணகிரிநாதர் பிறந்து வளர்ந்த இடம் திருவண்ணாமலை. அவர் தற்கொலை செய்ய முயன்றபோது முருகனே நேரில் வந்து காட்சியளித்து அவரை திருப்புகழ் பாடச்சொன்ன தலம் இந்த திருவண்ணாமலை. மேலும் ரமண மகரிஷி, சேஷாத்திரி சுவாமிகள் போன்றோரும் இடைக்காட்டு சித்தர் போன்ற சித்தர்களும் வாழ்ந்த இடம்.

அப்பர், ஞானசம்பந்தர், திரு நாவுக்கரசர், சுந்தரர் ஆகியோரால் பாடல் பெற்ற தலம். மாணிக்கவாசகர் இங்கு இருந்து திருவெம் பாவையையும், திருஅம்மானையையும் இயற்றி னார் என்று சொல்வர்.

மூன்றாம் பிரகாரத்தில் உள்ள ஸ்தல விருட்சமான மகிழ மரத்தின் கீழ் இருந்து பார்த்தால் கோவிலின் அனைத்து கோபுரங் களையும்காணலாம்.

அனைத்து கோவில்களைப் போல் தினமும் ஆறு கால பூஜைகள் இங்கும் நடைபெறுவதுண்டு. சித்திரை மாதம் வசந்த உற்சவம், ஆனி மாதம் பிரமோத்சவம், ஆடி பூரம், நவராத்திரி, தை மாதம் உத்திராயன புன்னிய கால பிரமோத்சவம், திருவூடல் திருவிழா,மாசி மாதம் மகா சிவராத்திரி, பங்குனி உத்திரம் போன்ற விழாக்கள் இங்கு நடைபெறுகின்றன.

சிவன் பிரம்மாவிற்கும், விஷ்ணுவுக்கும் பார்வதிக்கும் ஜோதியாக காட்சியளித்ததை கொண்டாடும் வகையில் கார்த்திகை மாதம் பத்து நாட்கள் கார்த்திகை தீப உற்சவமும் நடைபெறும்.

www.aanmeegamalar.com

# கிரிவலம் செய்ய உகந்த நேரம் மற்றும் மனதைரியம் தரும் சந்திரபகவான்

பழங்காலத்தில் திருவண்ணாமலை கிரிவலத்தை ஐந்து முறை வலம் வந்தார்களாம் (80கி.மீ) அப்படி வலம் வந்தால் மறுபிறவியற்ற நிலை ஏற்படும் என்பது நம்பிக்கை. பொதுவாக திருவண்ணாமலையை கிரிவலம் செல்ல இரவு ஏழு மணிக்கு மேல் சுற்ற ஆரம்பிக்கும் போது தான் சந்திரபகவானின் 16 கலைகளில் இருந்து வெளிப்படும் கதிர்கள் மலையின் மீது பட்டு கிரிவலம் செல்பவர் மீது பட்டு மனதைரியத்தை உண்டாக்கும்.



# திருவண்ணாமலையை கிரிவலம் செய்யும் கிழமைகளின் பலன்கள்:

| | |
|---|---|
| ஞாயிறுக்கிழமை | சிவபதம் |
| திங்கள் கிழமை | உலகாளும் வல்லமைகிட்டும் |
| செவ்வாய்கிழமை | கடன், ஏழ்மைகள் விலகி பிறவிப் பிணியில் இருந்து விடுதலை கிட்டும் |
| புதன் | கலைகளில் தேர்ச்சி |
| வியாழக்கிழமை | ஞானிகளுக்கு ஒப்பான நிலை கிட்டும் |
| வெள்ளிக்கிழமை | விஷ்ணுபதம் கிட்டும் |
| சனிக்கிழமை | நவகிரகங்களை வழிபட்டதன் பலன் கிடைக்கும் |







பாரம்பரியமான,
சத்தான, சுவையான
சமையல் குறிப்புகளை
மிக எளிமையாகவும்,
தெளிவாகவும் அறிந்து கொள்ள



**கீதாசமையல்**
(geetha samayal)
youtube சேனலை பாருங்கள்




geetha samayal வீடியோவை பார்த்து
Like, Share, Subscrib செய்யுங்கள்

# ஆன்மீக வழியில் அமைதி

55

ஸ்தூல,சூக்ம, காரண சரீரம் ஆகிய மூன்று சரீரங்கள், விழிப்புநிலைம், கனவுநிலை, உறக்கநிலை ஆகிய மூன்று அவஸ்தைகள், பஞ்சகோசங்கள் என பதினோரு வகை சேர்க்கைதான் அநாத்மாக்கள். இந்த அநாத்மாக்களுக்கு வேறாகவும் அப்பாற்பட்டும் அழியாமல் இருப்பது ஆத்மா. மூன்று சரீரங்களுக்கு வேறானதும் மூன்று அவஸ்தைகளுக்கு சாட்சியாகவும் பஞ்சகோசங்களுக்கு அப்பாற்பட்டு பெரியதாக இருப்பது ஆத்மா. நான் படிக்கிறேன், நான் தியானம் செய்கிறேன் போன்ற நமது செயல்பாடுகளுக்கு எல்லாம் நமது உடலை நினைத்துக்கொண்டு 'நான்' என்று கூறுகிறோம். ஆனால் நான் என்பதற்கு சாஸ்திரத்தில் உண்மையான அர்த்தம் ஆத்மா ஆகும். நாம் இந்த சரீரத்தை 'நான்' என்று நினைத்துக்கொண்டு அதன்மீது அபிமானம் வைத்திருப்பதால் ஆத்மாவை நாம் அறிய முடிவதில்லை. நமது சரீரம் ஆத்மாவை மறைப்பதால் இது கோசம் எனப்படும். ஆத்மாவைப் புரிந்து கொள்வதற்கு இந்த உடல் தடையாக இருப்பதாலும், உடல் நமது கவனத்தை ஈர்த்து விடுவதாலும் இது கோசம் என்று கூறப்படுகிறது. ஆத்மாவிற்கு உறை போன்று இந்த மனித உடல் இருக்கிறது. அதாவது வாளுக்கு உறை போன்று உள்ளது.

சூக்ம சரீரம் என்பது நமது கண்ணுக்குத் தெரியாத மனம் ஆகும். ஐந்து கர்மேந்திரியங்கள், ஐந்து ஞானேந்திரியங்கள், ஐந்து பிராணங்கள், மனம், புத்தி என பதினேழு வகை சேர்க்கைதான் ஆத்மா என்று சாஸ்திரம் விளக்கம் அளிக்கிறது. பஞ்சகோசங்கள் இந்த மூன்று வகை சரீரங்களில் ஸ்தூல சரீரம் அன்னமய கோசமாக இருக்கிறது. காரண சரீரம் ஆனந்தமய கோசமாக இருக்கிறது. சூக்ம சரீரம் மற்ற மூன்று கோசங்களான பிராணமயகோசம், விஞ்ஞானமயகோசம், மனோமயகோசம் என பிரிக்கப்பட்டுள்ளது. ஸ்தூல சரீரம் அன்னமய கோசமாகவும், காரண சரீரம் ஆனந்தமயகோசமாகவும், சூக்ம சரீரம் பிராணமயகோசம், விஞ்ஞானமய கோசம், மனோமயகோசம் என்று பிரிக்கப்பட்டு செயல்படுகிறது.

சூக்ம சரீரத்தில் எந்தப்பகுதி பிராணமய கோசமாக இருக்கிறது. அதேபோல் எந்தப்பகுதி விஞ்ஞானமயகோசம், மனோமயகோசமாக இருக்கிறது என்பது பற்றி சாஸ்திரம் கூறுகிறது. நமது செயல்பாடுகள் செயல்படுவதற்கு உதவும் கர்ம இந்திரியங்கள் ஐந்து சக்திகள் ஆகும். நாம் பேசுவதற்கு உதவும் வாய், பார்ப்பதற்கு உதவும் கண், கேட்பதற்கு உதவும் காது போன்ற ஐந்து கர்மேந்திரியங்கள் ஆகும். சூக்ம சரீரத்தில் பத்து அங்கம் பிராணமய கோசத்திற்கு சென்று விடுகிறது. அவை ஐந்து பிராண தத்துவம், ஐந்து கர்மேந்திரியங்கள் ஆகும். பிராண சக்தி என்பது மனிதனுடைய அனைத்து செயல்பாடுகளுக்கும் மனிதனுக்கு ஆதாரமாக இருக்கக்கூடிய சக்தியாகும்.

பிராண சக்தி தன்னோட சக்தியை வெளிப்படுத்தும்போது நமது மூளையிலுள்ள செல்கள் புத்துணர்ச்சி அடைகின்றன. மூளை தெளிவடைந்து புத்துணர்ச்சி பெறுவதால் மனம் ஒரு நிலைப்பட்டு ஒரு நிலையில் குவிந்து நிற்பது மனம் அமைதி அடைவது எளிதாகிறது. கண்கள் பிரகாசிக்கும். பார்வைக் குறைபாடுகள் நீங்கும். நோய் எதிர்ப்பு சக்தி கூடும். ஹீமோகுளோபின் அளவு அதிகரிக்கும். காச நோய், ஆஸ்துமா , நிமோனியா போன்ற நோய்கள் விலகும். ஞாபக சக்தி அதிகரிக்கும் என்று சித்தர்கள் தங்கள் அனுபவத்தின் மூலம் கூறியுள்ளனர்.

நம் முன்னோர்கள் நடந்தேதான் எல்லா இடங்களுக்கும் செல்வார்கள். அப்படிச் செல்லும்போது நிமிர்ந்து நடப்பார்கள். அதுபோல அவர்கள் அமரும் போதும் நிமிர்ந்துதான் அமர்வார்கள். இதனால் அவர்களுடைய முதுகெலும்பு வளையாமல் அதற்கு முன்னால் அமைந்திருக்கும் நுரையீரல் நீளவாக்கில் இழுக்கப்பட்டு அதிலுள்ள இலட்சக் கணக்கான காற்று நுண்ணறைகளும் விரிவடைகிறது. அதனால் பிராண வாயு அந்த அறைகளுக்குள் செல்வதற்கு எளிதாகிறது. இதனால் நுரையீரலின் செயல்படும் சக்தி திறன் அதிகமாகிறது. எனவே குனிந்து உட்கார்ந்து கொண்டிருப்பது, குனிந்துகொண்டு நடப்பது, தொய்வாக அமர்வது, சுருண்டு படுப்பது இவற்றையெல்லாம் நாம் முற்றிலும் தவிர்ப்பது உடல் ஆரோக்கியத்திற்கு மிகவும் நல்லது. ஏனென்றால் இவற்றால் நாம் பூரண சுவாசத்தைப் பெற முடியாமல் போய் விடுகிறது. மனிதன் ஆரோக்கியமற்ற நிலையில் இருந்தாலும் அவன் மன அமைதியை இழந்து விடுவான் என்பதை கருத்தில் கொள்ள வேண்டும். மன அமைதிக்கு நமது உடல் ஆரோக்கியம் முக்கியம் என்பதை உணர்ந்து, உடலை

ஆரோக்கியமான நிலையில் வைத்துக்கொள்ள வேண்டும்.

இந்த பிராண சக்தி உலகமெல்லாம் பரவி நின்றாலும், பிராண வாயு நம் பூமியில் மட்டுமே இருக்கிறது. எனவேதான் இங்கே அனைத்து உயிரனங்கள் தோன்றி வாழ்கின்றன. ஏனென்றால் சுவாசத்தின் மூலம் நாம் பிராண சக்தியை பெற்றுக் கொள்வதோடு பிராண வாயு நம் உடலில் பத்து விதமாகப் பிரிந்து செயலாற்றி நம் உயிரைப் பாதுகாக்கிறது என்று சித்தர்கள் கூறியுள்ளதைப் பற்றி நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். பிராண சக்தி உடலில் அதிகரிக்கும் போது ஏற்படும் உஷ்ணமே குண்டலினியைக் கிளப்புவதற்கும், சுழுமுனை நாடி திறப்பதற்கும் காரணமாக அமைகிறது.

சூக்ம சரீரத்தில் எந்தப்பகுதி மனோமய கோசமாக செயல்படுகிறது?. சூக்ம சரீரத்தில் உள்ள ஆறு சக்திகள் மனோமயகோசமாக செயல்படுகிறது. அவை கண், காது, வாய் போன்ற ஐந்து ஞானேந்திரியங்கள் அறிவைக் கொடுக்கும் ஆதார சக்தியாக செயல்படுவது மனம் என்ற சக்தி ஆகும். மனிதனுக்கு விருப்பு, வெறுப்பு, கோபம், சாந்தம் போன்ற உணர்வுகள் மற்றும் மனிதனுக்கு எண்ணங்கள் எங்கு தோன்றுகிறதோ அது மனம் என சாஸ்திரம் கூறுகிறது. நமது மனம், ஆறு சக்திகளுக்கு அறிவைக் கொடுப்பதற்கு எது ஆதார சக்தியாக இருக்கிறதோ அது மனோமய கோசம் எனப்படும்.

சூக்ம சரீரத்தில் புத்தி மற்றும் ஐந்து ஞானேந்திரியங்கள் சேர்ந்து எங்கு எப்போது செயல்படுகிறதோ அது விஞ்ஞானமய கோசமாக அந்தப்பகுதி இருக்கிறது. ஸ்தூல சரீரத்தில் புத்தி மற்றும் ஐந்து ஞானேந்திரியங்கள் சேர்ந்து எங்கு எப்போது செயல்படுகிறதோ அது அன்னமய கோசமாக இருக்கிறது. காரண சரீரத்தில் புத்தி மற்றும் ஐந்து ஞானேந்திரியங்கள் சேர்ந்து எங்கு எப்போது செயல்படுகிறதோ அது ஆனந்தமய கோசமாக இருக்கிறது. சூக்ம சரீரத்தில் புத்தி மற்றும் ஐந்து ஞானேந்திரியங்கள் சேர்ந்து எங்கு எப்போது செயல்படுகிறதோ அவை பிராணமயகோசம், மனோமயகோசம், விஞ் ஞானமயகோசமாக இருக்கிறது என்பதை நாம் அறிந்து கொள்ளலாம்.

ஆனந்தமயகோசம் என்றால் அது காரண சரீரம் என்று அறிந்து கொள்ளலாம். காரண சரீரம் என்பது அது அறியாமையின் இருப்பிடம் என்று சாஸ்திரம் கூறுகிறது. நமது ஆழ்ந்த உறக்கத்தில் அறியாமை மற்றும் ஆனந்தம் இருக்கிறது. நாம் தூங்கிக்கொண்டிருக்கும்போது இன்பம், துன்பம், விருப்பு, வெறுப்பு போன்றவற்றை நாம் உணராமல், அறியாமல் ஆனந்தமாக உறங்கினேன் என்று நாம் கூறுவது ஆனந்தமயகோசம் ஆகும்.

சத்துவ, ரஜோ மற்றும் தமோ என மூன்று குணங்களின் தத்துவ சேர்க்கைதான் மாயை எனப்படும். இந்த மாயையிலிருந்து நாம் காணும் உலகம் வெளிப்பட்டு வந்தது என்று சாஸ்திரம் கூறுகிறது. இந்த உலகில் எந்தவிதமான செயல்பாடுகள் இல்லாமல் ஒரே இடத்தில் அறிவற்ற தன்மையில் இருப்பது தமோ குணம் ஆகும். எடுத்துக்காட்டாக கல், மண் மரக்கட்டைகள் போன்ற ஜடப்பொருள்கள். உலக செயல்பாடுகளில் ஈடுபட்டு அறிவற்ற தன்மையில் இருப்பது ரஜோ குணம் ஆகும். எடுத்துக்காட்டாக பறவைகள், மரம், செடிகொடிகள் போன்ற உயிரினங்கள். உலக செயல்பாடுகளில் ஈடுபட்டு, அவற்றை அறிந்துகொண்டு அறிவுபூர்வமாக செயல்படும் தன்மையுடன் இருப்பது சத்துவ குணம் எனப்படும். எடுத்துக்காட்டாக மனிதர்கள், முனிவர்கள் வானில் உலாவும் தேவர்கள்.

உலகில் காணும் அனைத்து உயிரினங்களும் மூன்று குணங்களின் சேர்க்கைதான் என்று சாஸ்திரம் கூறுகிறது. மனிதர்களில் ஜடப்பொருள்கள் போன்று இருப்பவர்கள் தமோ குணம் படைத்தவர்களாக கருதப்படுகிறார்கள். பறவைகள், மற்ற உயிரினங்கள் போன்று இருப்பவர்கள் ரஜோ குணம் படைத்தவர்களாக கருதப்படுகிறார்கள். மனிதர்கள், ஞானிகள் போன்ற குணம் உடையவர்கள் சத்துவ குணம் படைத்தவர்கள் என்று சாஸ்திரம் கூறுகிறது. ஆனால் மனிதனுக்கு மட்டும் தமோ, ரஜோ, சத்துவ என மூன்று விதமான குணங்களும்

ஆன்மிகம் தத்துவம் உடல்நலம் பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com

இருக்கிறது. காலத்திற்கு இடத்திற்கு ஏற்றவாறு மனிதனுக்கு மட்டும் தமோ, ரஜோ, சத்துவ என மூன்றுவிதமான குணங்களில் இருந்துகொண்டு ஏதோவொரு குணத்திற்கு மாறிக்கொண்டே இருக்கிறான். அதாவது மனிதன் மட்டும் மூன்றுவிதமான குணங்களுடன் உலகில் வாழ்கிறான். அதனால் மனிதர்களை குணம் மாற்றமுடையவன் என்று கூறப்படுகிறது.



எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்

பொதுவாக மனிதன் உறங்கும்போது தமோ குணத்தில் இருக்கிறான். அதாவது ஜடப்பொருள்கள் போன்று செயல்பாடுகள் இல்லாமல் அசைவின்றி இருக்கிறான். அப்போது மனிதனிடமுள்ள ரஜோ, சத்துவ குணத்தை அடக்கி அவனது தமோ குணம் மேலே வந்து விடுகிறது என்பதை நாம் அறிந்து கொள்ளலாம். ஆழ்ந்த உறக்கத்தையும் தமோ குணம் என்று கூறலாம். மனிதனுடைய ஆழ்ந்த உறக்கத்தில் ரஜோ, சத்துவ குணங்கள் அப்போது அவனிடம் வருவதில்லை.

ஆனந்தமய கோசம் காரண சரீரத்தில் சம்பந்தப்படுகிறது. மனிதனுடைய தமோ குணம் அப்போது மேலே வந்து ரஜோ, சத்துவ இரு குணங்களையும் அடக்கி விடுகிறது என்பதை அறிந்து கொள்ளலாம். மனிதர்களுக்கு மட்டும் தமோ, ரஜோ மற்றும் சத்துவ என மூன்று குணங்கள் இருக்கிறது. மனிதனுடைய மன நிலைக்கு ஏற்ப மூன்று குணங்களும் மாறி மாறி வந்து கொண்டு இருக்கும். மனிதனைப்போல் உலகில் காணும் மற்ற உயிரினங்களுக்கு சத்வகுணம் என்பது இருப்பதில்லை.

மனிதன் ஸ்தூல சரீரத்தில் விழிப்புநிலையில் இருந்து மகிழ்ச்சியை அவன் அனுபவவிக்கிறான். அவ்வாறு மகிழ்ச்சியாக இருக்கும்போது மனிதன் ஆனந்தமயகோசத்தில் அனுமானம் வைத்து இருக்கிறான் என்பதை அறிந்து கொள்ளலாம். நமது காரண சரீரம் ஆனந்தமய கோசத்தில் அபிமானம் வைத்து இருக்கிறது. அதுவே ஸ்தூல சரீரம் துன்பங்களை எல் லாம் மறந்து ஆனந்தமாக இருக்கும்போது அன்ன மயகோசத்தில் இருந்து ஆனந்தமய கோசமாக மாறி விடுகிறது என்று சாஸ்திரம் கூறுகிறது.

மனிதனுக்கு ஏற்படக்கூடிய மகிழ்ச்சியானது பிரிய குணம், போத எண்ணம் மற்றும் பிரபோத எண்ணம் என மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அதாவது அவற்றை விரும்பு, சுகம், அதிக சுகம் என்றும் கூறலாம். பிரிய குணம் என்பது நமக்கு விருப்பமான பொருள்களைப் பார்க்கும்போது பிரியம் என்ற குணம் இயல்பாக மனதிற்குள் வந்து விடுகிறது. எடுத்துக்காட்டாக குழந்தை தனக்கு இஷ்டமான விருப்பமான சாக்லேட்டைப் பார்க்கும்போது அதன்மீது இயல்பாக ஆசை கொள்வது போன்றதாகும்.

போத எண்ணம் என்பது மனிதன் தான் விரும்பிய பொருள்களை அடைந்து மகிழ்ச்சி கொள்ளும் எண்ணம் இயல்பாக மனதில் வந்து விடுகிறது. எடுத்துக்காட்டாக குழந்தை தான் விரும்பிய சாக்லேட்டை கையில் வைத்துக்கொண்டு இருக்கும்போது குழந்தையின் மனம் மகிழ்ச்சியுடன் இருப்பது போன்றதாகும்.

பிரபோத எண்ணம் என்பது மனிதன் தான் விரும்பிய பொருள்களை அடைந்து அதனை அனுபவவிப்பது ஆகும். அவ்வாறு விரும்பிய பொருள்களை அனுபவவிப்பதன் மூலம் அவன் மனம் மகிழ்ச்சி அடைகிறான். எடுத்துக்காட்டாக குழந்தை விரும்பிய சாக்லேட்டை பெற்று வாயில் போட்டு சுவைத்து மகிழ்ச்சி அடைவது போன்றதாகும்.

மனிதன் ஒரு பொருளைப் பார்க்கும்போது ஏற்படக்கூடிய ஒருவிதமான மகிழ்ச்சி. அந்தப்பொருளை அவன் அடையும்போது ஏற்படக்கூடிய ஒருவிதமான மகிழ்ச்சி. அந்தப்பொருளை அடைந்து அவன் அனுபவவிக்கும்போது மிகுந்த மகிழ்ச்சி கொள்கிறான் என்பதை நாம் நடைமுறையில் பார்க்கிறோம். அதாவது மனம் விரும்பிய ஒரு பொருளை பார்ப்பது, அதனை பெறுவது, அப்பொருளை அனுபவவிப்பது என்று மூன்று நிலைகளில் நமது மகிழ்ச்சி செயல்படுகிறது. அதாவது நமது மனம் விரும்பிய ஒரு பொருளை பார்க்கும்போது ஒருவிதமான மகிழ்ச்சி, அப்பொருளை பெறும்போது ஏற்படக்கூடிய ஒருவிதமான மகிழ்ச்சி , அப்பொருளை அனுபவிக்கும்போது ஏற்படக்கூடிய மகிழ்ச்சி என மூன்று நிலைகளில் மகிழ்ச்சி ஏற்படுகிறது என்று சாஸ்திரம் கூறுகிறது..

– அமைதி தொடரும்

**எழுத்தாளர் பூ.சுப்ரமணியன்**
Tahsildar (Retd) கைபேசி: 9894043308

**Owned, Published by CV.NATARAJAN. Design by SML.GRAPHICS, CHENNAI. Published from No.18, B.E. Colony, Kodambakkam, Chennai - 600 024.**
**Editor : CV.NATARAJAN, Cell: 9444228203.**
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com

# விருப்ப சந்தா செலுத்த










விருப்ப சந்தா

UPI மற்றும் வங்கி
வாயிலாகவும்
சந்தா செலுத்துங்கள்...

बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda

BHIM Baroda Pay
SCAN TO PAY
WITH ANY BHIM UPI APP
Merchant Name : AANMEEGA MALAR TRUST

UPI
paytm | BHIM | BharatPe

**AANMEEGA MALAR TRUST**
**ACCOUNT NO. 49510100003648**
**IFSC CODE: BARB0KODAMB**
**(FIFTH CHARACTER IS ZORO)**
**BANK OF BARODA (KODAMBAKKAM BRANCH)**